

# சாகித்திய அகாதமி விருது பெற்ற தமிழ் எழுத்தாளர்கள் (1955 முதல் 2024 வரை)

முனைவர் த. மகேஸ்வரி



9 788199 237483

# சாகித்திய அகாதமி விருது பெற்ற தமிழ் எழுத்தாளர்கள் (1955 முதல் 2024 வரை)

முனைவர் த. மகேஸ்வரி

# Title Verso

**Title of the Book:** **Sahitya Akademi Award Winning Tamil Writers (1955 to 2024)**

**புத்தகத்தலைப்பு :** **சாகித்திய அகாதமி விருது பெற்ற தமிழ் எழுத்தாளர்கள் (1955 முதல் 2024 வரை)**

**Author** : Dr. D. Maheswari
**First Edition** : 2025
**Pages** : 70
**Price** : 450
**Isbn Number** : 978-81-992374-8-3

**PUBLISHER** : **Pandian Educational Trust,**
**3/350, Veterinary Hospital Backside,**
**Virudhunagar – 626001.**
**Tamil Nadu**

**PRINTER** : **Maheswari Publishers,**
**3/350, Veterinary Hospital Backside,**
**Virudhunagar – 626001.**
**Tamil Nadu**

**பதிப்புரிமை / Copyright © 2025 : கட்டுரையாளர்களுக்கு / Authors'**

அனைத்து பதிப்புரிமையும் பெறப்பட்டுள்ளது. இப்புத்தகத்தின் எப்பகுதியும் பதிப்பகத்தின் அனுமதியின்றி அச்சிடப்படக்கூடாது.

All rights reserved. No part of this book should be transmitted to any type of printed material without proper permission from the publisher.

# மதிப்புரை

**முனைவர் அ. அமுதா** அவர்கள் "**இனவரைவியல் நோக்கில் கி. ராவின் படைப்புகள்**" என்ற கட்டுரையில் கி.ராவின் படைப்புகள் தமிழர் இன அடையாளம், நிலம் மற்றும் மரபு பற்றிய ஆழ்ந்த சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றன என்பதையும் இனவரைவியல் கோணத்தில் மக்கள் பண்பாட்டின் வேர்களை ஆராய்ந்தும் இன்றைய ஆய்வுலகிற்குப் புதுவித செய்திகளை வழங்கியுள்ளார். கி.ரா எழுத்துகளில் உள்ள பழங்குடி வாழ்க்கை, சமூக ஒற்றுமை மற்றும் சூழலியல் நுணுக்கங்கள் இனஅறிவியல் ஆவணங்களாக ஆய்வாளரால் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், மக்கள் கலாசாரத்தை இலக்கிய வடிவில் நிலைப்படுத்திய கி.ரா. தமிழ் இன வரலாற்றைப் புதுமையாக எழுதியவர் என இவ்ஆய்வு கூறுகிறது.

**முனைவர் சு. ஏஞ்சல் ஜெயலெட் ராணி** அவர்கள் எழுதிய "**சமுதாய நோக்கில் சாகித்ய அகாதமி விருதுபெற்ற திலகவதியின் கல்மரம் நாவல்**" என்ற கட்டுரையில் திலகவதியின் கல்மரம் நாவல் பெண் சார்ந்த சமுதாய மாற்றங்களையும் பெண்களின் வாழ்க்கைச் சவால்களையும் ஆழமாகக் கூறுவதாக அமைந்துள்ளது. கல்மரம் நாவலின் மையப்பொருள் மகளிர் அடையாளம், வர்க்க வேறுபாடு மற்றும் சமூக நெறிகளின் எதிரொலி என்பதை ஆய்வாளர் திறம்பட விவரித்துள்ளார். மேலும், மனித உறவுகளின் உளவியல் நுணுக்கங்களையும் சமூக விழிப்புணர்வையும் சாகித்ய அகாதமி விருது பெற்ற இந்நாவல் பிரதிபலிக்கிறது என ஆய்வாளர் ஆராய்ந்தறிந்துள்ளார்.

**முனைவர் ஜே. கோமளா** அவர்கள் **"சாகித்ய அகாதமி விருது பெற்ற சிறுகதைகளின் கட்டமைப்பும், சமூக சிந்தனைகளும் (1955–2024)"** என்ற கட்டுரையில் சாகித்ய அகாதமி விருது பெற்ற சிறுகதைகளின் சமூகப் பின்புலம், கதை வடிவம் மற்றும் சிந்தனையின் மாற்றம் ஆகியவற்றை ஆராய்கிறார். காலகட்ட வாரியாகப் பெற்ற விருதுகள் இலக்கியத்தின் சமூகப் புலனுணர்வை வெளிப்படுத்துகின்றன. சிறுகதைகள் தனிமனித அனுபவத்திலிருந்து சமூக நீதி வரை விரிந்துள்ளன. இவ்ஆய்வுக் கட்டுரையில், கதைகளின் கரு, மொழி, கலை அமைப்புகள் மற்றும் புலம்பெயர்ந்த தமிழரின் அனுபவங்கள் ஆகியவை விரிவாகப் பதிவாகியுள்ளன.

**முனைவர் பீ. பெரியசாமி** அவர்கள் **"சில நேரங்களில் சில மனிதர் நாவலில் 'கங்கா'"** என்ற கட்டுரையில் சில நேரங்களில் சில மனிதர் நாவலில் கங்கா என்ற பாத்திரம் மனித மனத்தின் ஆழ்ந்த குற்ற உணர்ச்சிகளையும் மனச்சிதைவு நிலைகளையும் பிரதிபலிக்கிறது என்று ஆய்வு செய்து விளக்கியுள்ளார். நாவல் சமூக மனப்பான்மை, உறவு சிக்கல்கள் மற்றும் தத்துவ அடிப்படையிலான மனித வாழ்வை ஆராய்கிறது. கங்காவின் உருவம் பெண் மனத்தின் போராட்டத்தையும் ஒடுக்கப்பட்ட உணர்வுகளையும் வெளிப்படுத்துகிறது. சமூக மற்றும் உளவியல் ஆய்வுக் கோணத்தில் நாவலை அணுகும் இவ்ஆய்வுக் கட்டுரை ஆழ்ந்த சிந்தனையை வெளிப்படுத்துகிறது.

**முனைவர் பி. ஸ்ரீதேவி** அவர்கள் **"மின்சாரப்பூவில் காணலாகும் சமுதாய விழுமியங்கள்"** என்ற கட்டுரையில் மின்சாரப்பூ நாவல் நவீன சமூகத்தின் நெறி விழுமியங்களையும் உறவுத் தகராறுகளையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. மனித மனத்தின்

மாறுபாடுகள், பெண்களின் தன்னம்பிக்கை, மற்றும் நகர்ப்புற வாழ்வின் நெருக்கடிகள் ஆகியவை நாவலின் மையமாகின்றன. நவீன வாழ்வின் வெளிப்புறப் பிரகாசத்தின் பின்னால் மறைந்திருக்கும் உண்மைகளை வெளிக்கொணர்கிறார். சமூக விழுமியங்களின் வீழ்ச்சி மற்றும் நவீனத்தின் ஆழ்ந்த தாக்கம் பற்றிய முனைவர் பி. ஸ்ரீதேவி அவர்களின் ஆய்வு சிந்திக்க வைக்கிறது.

**நன்றி**

**முனைவர் த. மகேஸ்வரி**

# உள்ளடக்கம்



| வ. எண் | தலைப்பு | ப. எண் |
|---|---|---|
| 1. | இனவரைவியல் நோக்கில் கி. ராவின் படைப்புகள்<br>முனைவர் அ. அமுதா | 1 |
| 2. | சமுதாய நோக்கில் சாகித்ய அகாதமி விருதுபெற்ற திலகவதியின் *கல்மரம்* நாவல்<br>முனைவர் சு. ஏஞ்சல் ஜெயலெட் ராணி | 15 |
| 3. | சாகித்ய அகாதமி விருது பெற்ற சிறுகதைகளின் கட்டமைப்பும், சமூக சிந்தனைகளும் (1955-2024)<br>முனைவர் ஜே. கோமளா | 32 |
| 4. | *சில நேரங்களில் சில மனிதர்கள்* நாவலில் “கங்கா”<br>முனைவர் பீ. பெரியசாமி | 41 |
| 5. | மின்சாரப்பூவில் காணலாகும் சமுதாய விழுமியங்கள்<br>முனைவர் பி. ஸ்ரீதேவி | 55 |

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**

**நிற்க அதற்குத் தக. (குறள் - 391)**

# 1

# இனவரைவியல் நோக்கில் கி. ராவின் படைப்புகள்

**முனைவர் அ. அமுதா,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
வ.உ.சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி, தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச் சுருக்கம்**

*ஒரு தனிமனிதனோ அல்லது சமுதாயமோ எதுவானாலும் சரி அதன்தன் பழக்கவழக்கங்களே பண்பாட்டுக் கூறுகளை நிர்ணயம் செய்கின்றன. கி.ராஜநாராயணன் படைப்புகளில் கரிசல் வட்டார மொழி என்பது தனித்தன்மை வாய்ந்ததாகும். தமிழ், தெலுங்கு ஆகிய இரண்டு மொழிகளின் கலப்பினை அவரது படைப்புகளில் காணலாம். மக்களின் வாழ்க்கை நிலை, தட்பவெப்பநிலை, பண்பாடு, தொழில்கள் இவைகளுக்கேற்ப அவர்கள் பேசுகின்ற மொழியின் வேறுபாடுகளை முதன்முதலில் பதிவு செய்து 'கரிசல் வட்டார வழக்குச் சொல்லகராதி' என்ற அகராதியை தொகுத்தவர் கி.ரா. இவரது படைப்புகளில் கறுப்பு நிலமான கரிசல் பூமியில் தாம் நேரில் பார்த்த காட்சிகளையும், அனுபவங்களையும் வட்டார மொழியில் பதிவு செய்துள்ளார். கி.ரா சொல்கின்ற கதையில் இயல்பாகவே மண்ணின் வாசனை தெரியும். மேலும் தான் பல்லாண்டுகளாக தொடர்ந்து வாழ்ந்த கரிசல் பூமியில் கண்ட காட்சிகளை அழகியல் தன்மையுடன் விவரிப்பதன் மூலம் அந்த சமூகத்தின் வரலாறும்,*

 **ISBN Number: 978-81-992374-8-3**

*மதிப்பீடுகளும் கதைகளில் இடம் பெற்றுள்ளன. கி.ரா தான் சார்ந்த தெலுங்கு பேசுகிற மக்களின் பண்பாட்டு அடையாளத்தைப் புனைவாக்கும் போது இனவரைவியல் தன்மைக்கு முக்கியத்துவம் தந்துள்ளார். அத்தகைய புனைவாக்க கதையாக 'கோபல்ல கிராமம்' என்னும் புதினம் அமைகிறது. 1991 ஆம் ஆண்டு 'கோபல்லபுரத்து மக்கள்' என்ற வரலாற்று நாவலுக்கு சாகித்திய அகாடமி விருதை இந்திய அரசாங்கம் கி. ராவிற்கு வழங்கி கௌரவித்தது. இந்நாவலில் கோபல்ல கிராமத்தில் வாழும் மக்களின் இரு வேறு வகையான வாழ்க்கை முறையினை அறிய முடிகிறது. தொடக்க காலத்தில் நாடோடி வாழ்க்கையைத் தழுவிய சமூகமாக அவர்களின் வாழ்க்கை நிலை இருந்தது. அப்போது அம்மக்களின் வாழ்க்கையானது மொழி அறியாத நிலையில், ஊர், ஆள் தெரியாமல் பண்பாடாத துன்பம் மிகுந்த வாழ்க்கையை வாழ்ந்திருந்தனர். இம்மக்களின் வாழ்க்கையைப் பற்றி கோபல்ல கிராமம் புதினத்தில் மங்கத்தாயாரு அம்மாள் என்ற கதாபாத்திரத்தின் மூலம் கி.ரா பதிவு செய்துள்ளார். இவரது படைப்புகளில் கரிசல் நிலத்தில் வாழும் கம்மவார் இனமக்களின் கலாச்சாரம், வாழ்க்கை, நம்பிக்கை, போராட்டங்கள் போன்றவை உயிரோவியங்களாகச் சித்தரிக்கப்பட்டிருப்பதை இனவரைவியல் நோக்கில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**குறிப்புச் சொற்கள்:** இனவரைவியல், கம்மவார் மக்கள், குருமலை சரிவு, நீராகாரம், கள்ளிக்காடு, கரிசல் நிலம்.

## முன்னுரை

இலக்கியங்களின் பல்வேறு வளர்ச்சி படிமானங்களில் ஒன்று வட்டார இலக்கியங்கள் ஆகும்.

 **ISBN Number: 978-81-992374-8-3**

வட்டார படைப்பாளர்கள்த் தாங்கள் சார்ந்த சமூக வட்டார மக்களது வாழ்வியலைப் பிரதிபலிப்பவையாக தமது படைப்புகளை உருவாக்குவர். அவ்வகையில் கரிசல் வட்டார முன்னோடி எழுத்தாளரை கி.ரா தமது படைப்புகளில் தனது சமூக வட்டார, மக்களான கம்மவார் இனமக்களின் வாழ்வியல் பதிவுச் செய்துள்ளார். இடம் விட்டு இடம் பெயர்ந்து குறிப்பட்ட ஓர் இடத்தில் நிலையாகத் தங்கி காடுகளைத் திருத்தி, அதனை வளம் கொழிக்கும் விளை நிலங்களாக மாற்றிய கம்மவார் இனமக்களின் வாழ்க்கை முழுவதும் அந்த மண்ணையே நம்பி உள்ளது. மண்ணின் வளமே இம்மக்களின் வளத்துக்கு காரணமாக அமைகின்றது. உழவுத் தொழிலையே முதன்மைத் தொழிலாகக் கொண்ட இம்மக்களின் மண் சார்ந்த மரபுகள் கி.ராவின் படைப்புகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவர்களது வாழ்வும் வளமும் மண்ணை ஒட்டியே உள்ளதனை கதை நிகழ்ச்சிகளின் போக்கில் புலப்படுத்தியுள்ளார்.

**இனவரைவியல்**

இனவரைவியல் என்பது மானிடவியலின் முக்கிய பிரிவுகளுள் ஒன்றாகும். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் மக்கள் குழு அல்லது இனத்தின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான அனைத்து நிகழ்வுகளின் யதார்த்தமான தேடல் மூலம் உருவாகும் படைப்பே இனவரைவியலாக அமைகிறது. ஒரு இனத்தின் பண்பாட்டை இனவரைவியல் அடிப்படையில் விளக்க முற்படும் போது அதன் புவிச்சூழல் தன்மை, சுற்றுச்சூழல், காலநிலை, வாழ்வியல் சடங்குகள், சமூகக்கட்டுப்பாடு, நம்பிக்கைகள் முதலியவற்றைக் கொண்டு வரையறை செய்தல் இன்றியமையாததாகும்.

 **ISBN Number: 978-81-992374-8-3**

பக்தவத்சல பாரதி இவைரைவியல் என்பதை இனக்குழுவியல் என்றும் குறிப்பிடுகிறார். இவர் இனவரைவியல் குறித்து,

> **சமுதாயம் பண்பாடு மானிடவியலுக்கு அடித்தளமாகத் திகழ்வது இனக்குழுவியலேயாகும். இனக்குழுவியல் என்னும் பொருளுடைய 'Ethnography' என்னும் ஆங்கிலச்சொல் 'Ethnos' 'Graphics' ஆகிய கிரேக்கச் சொற்களின் மூலங்களைப் பெற்றுள்ளது. 'Ethnos' என்பதற்கு இனம் (Race) இனக்குழு (Ethnic group) மக்கள் (people) என்பது பொருள். 'Graphics' என்பதற்கு எழுவதுவது என்பது பொருள். ஆகவே இனக்குழுவியல் என்பது ஒரு தனிப்பட்ட இனக்குழு அல்லது மக்களைப் பற்றி எழுதுதல் என்னும் பொருளை உணர்த்துகின்றது. (பக்தவத்சல பாரதி, பண்பாடு மானிடவியல், ப. 120)**

என்று விளக்கமளித்துள்ளார்.

ஆ. சிவசுப்ரமணியன், "**மானிடவியலின் முக்கியப் பிரிவுகளில் ஒன்றாக இனவரைவியல் அமைகிறது என்றும் ஒரு குறிப்பிட்ட மக்கள் குழு அல்லது பண்பாட்டை விவரிக்கும் கலை அல்லது அறிவியலே இனவரைவியல்" (ஆ. சிவசுப்ரமணியன், இனவரைவியலும் தமிழ் நாவலும்)** என்றும் விளக்கமளிக்கிறார். மேற்கூறிய அறிஞர்களின் கூற்றுகளிலிருந்து ஒரு குறிப்பட்ட சமுதாயத்தின் மக்கள் குழு அல்லது இனம் சார்ந்த மக்களின் பண்பாட்டை அறிந்து கொள்வதற்கு அப்பண்பாட்டையுடைய மக்களோடு சில காலம் வாழ்ந்து கள ஆய்வு உத்திமுறையைப் பயன்படுத்தி, அவர்களின் எல்லா


**ISBN Number: 978-81-992374-8-3**

விதமான வாழ்க்கை நிகழ்வுகளைப் பற்றியும் அறிந்து கொண்டு அப்படியே முறைப்படுத்தி எழுத்துப்பூர்வமாக அளிக்கும் ஆவணமே இனவரைவியல் என்பது தெளிவாகிறது.

**கம்மவார் - இனத்தோற்றம்**

மனித இனத்தின் தோற்றம் பற்றி பல்வேறு கருத்துக்கள் இருப்பது போலவே, ஒவ்வொரு சமூக இனத்தின் தோற்றத் தொன்மங்களும் மக்களிடைய வாய்மொழி மரபாக வழங்கி வருகின்றன. அவ்வகையில் ஆந்திராவிலிருந்து தமிழகத்திற்கு தெலுங்கு பேசும் மக்கள் வந்தபோது ஏற்பட்ட அனுபவங்களையும், இன்னல்களையும் சொல்வதோடல்லாமல் கரிசல் காட்டைத் திருத்தி சீர்படுத்தி, அங்கு கம்மவார் மக்கள் குடியேறியதை வாய்மொழியாகச் சொல்பவளாக மங்கத்தாயாரு அம்மாள் அமைந்துள்ளார். நூற்றி முப்பத்தேழு வயது மங்கத்தாயாரு அம்மாள் கோபல்ல கிராமத்து, மக்களின் தாயாகவே போற்றப்படுகிறாள். கம்மவார் மக்களின் இனத்தோற்றதை பற்றி,

> **நாகார்ஜீன மலையில் வீரம் நிறைந்த ஒரு ராட்சத பெண் இருந்தாளாம் அவளை அடக்க யாராலும் முடியவில்லையாம். அழகும், வீரமும் கொண்ட ஒரு பிராமணம் அவளை அடக்கி அவளுடைய மூக்கில் துறட்டியைப் போட்டு இழுத்துக் கொண்டு வந்ததால், அந்த தொறட்டியையே அவள் ஆபரணமாக விரும்பிப் போட்டுக் கொண்டாளாம். ஆகவே அவர்களுடைய சந்ததியராகிய நமது பெண்டுகள் இன்றும் மூக்கில் தொறட்டி என்ற ஆபரணத்தை அணிந்து கொண்டிருக்கிறோம். (கோபல்ல கிராமம், ப. 40)**

 **ISBN Number: 978-81-992374-8-3**

என்ற மங்கத்தாயாரு அம்மாளின் பூர்வக்கதை வாயிலாக அறிய முடிகிறது. கி.ராஜநாராயணன் தம் படைப்புகளில் வெளிப்படும் நாயக்கர் இன மக்களுக்கு கம்மவார் எனப் பெயர் வந்ததற்கான காரணத்தை மங்கதாயாரு அம்மாள் வாயிலாக, **“காது வளர்த்து வளையம் போன்ற ‘கம்ம’ என்ற ஆபரணத்தை இந்த பெண்கள் அணிந்து கொள்வதால் இப்பெயர் வந்தது என்று சொல்லுவாள்” (கோபல்ல கிராமம், ப. 40)** எனக்கூறி இனப்பெயர் காரணத்தை நாட்டுப்புறவியல் நம்பிக்கையோடும், வாய்மொழிக் கூறுகளோடும் இணைத்துக் கூறுகிறார்.

**கம்மவார் மக்களின் இடப்பெயர்வு**

மக்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம்பெயர்வதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம். அவ்வாறு இடம்பெயர்ந்து வந்ததற்கான காரணங்களை ஒரு தலைமுறையினர் மற்றொரு தலைமுறையினருக்கு வாய்மொழிக் கதைகளைக் கூறி வருகின்றனர்.

> **தெலுங்கு மொழி பேசும் கம்மவார் சமூக மக்கள் வாழ்ந்து வந்தது புன்செய் ஆந்திர கிராமமே. புன்செய் பயிர்த்தொழில் பரம்பரையாகச் செய்து நிலவுடைமை சமுதாயமாகவே வாழ்ந்து வந்தனர் (கோபல்ல கிராமம், ப. 9)**

என்று கி.ராஜநாராயணன் கூறியுள்ளார். பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் பல்வேறு காரணங்களால், ஆந்திர தேசத்திலிருந்து தெற்கு நோக்கு கூட்டமாகக் குடிபெயர்ந்து, தமிழகத்தில் கோவில்பட்டிக்கு அருகில் குருமலைச் சரிவுகளில் குடியேறிய தெலுங்கு மொழி பேசும் கம்மவாரின் வரலாற்றை நாட்டுப்புற மக்களின் நம்பிக்கையோடும், கதைகளோடும் கி.ரா கோபல்ல கிராமம் புதினத்தினத்தில் பதிவு செய்துள்ளார், இடப்பெயர்வின் போது,


**ISBN Number: 978-81-992374-8-3**

**ஆந்திர தேசத்திலிருந்து கம்மவார் மட்டும் இங்கே வரவில்லை. ரெட்டியார், கம்பளத்தார் செட்டியார், பிராமணர், பொற்கொல்லர், சக்கிலியர் இப்படி எத்தனையோ மக்கள் குடிப்பெயர்ந்து வந்தனர். அவர்களில் கம்மவார் தவிர மற்றவர்கள், தெலுங்கு அரசர்கள் இங்கே ஆட்சி செலுத்தியதால் வந்தவர்கள், பஞ்சம் பிழைக்க வந்தவர்கள், முஸ்லீம் ராஜாக்களுக்குப் பயந்து கொண்டு வந்தவர்கள் இப்படியாக இடம் பெயர்ந்தனர். (கோபல்ல கிராமம், ப. 40)**

என்பதை அறிய முடிகிறது. கம்மவார் மக்களின் இடப்பெயர்வினை கோவிந்த நாயக்கரின் பூட்டியான 137வயது மங்கத்தாயாரு அம்மாளின் ஒன்றுவிட்ட சகோதரியான சென்னாதேவியின் காரணமாக அமைந்தது என்றும், மேலும் மங்கத்தாயாருவின் வாயிலாக சென்னாதேவியைப் பற்றி கூறியதை,

**சென்னாதேவி இருக்கும் இடத்தில், அவளுக்கருகே அவளைச் சுற்றி ஒரு பிரகாசகம் குடிகொண்டிருக்கும். அவள் நிறை பௌர்ணமி அன்று பிறந்ததினாலோ என்னமோ அப்படி ஒரு சோபை அவளுடைய முகத்தில் இருந்தது. அவளுடைய அழகு பக்கத்து கிராமங்களுக்கு மட்டுமில்லை, வெகுதூரம் பிராபல்யம் அடைந்து, அந்த பிராபல்யமே அவளுக்கு வினையாக முடிந்தது (கோபல்ல கிராமம், ப. 41),**

என கி.ரா பதிவு செய்துள்ளார். சென்னாவின் அழகு, அவளைக் கண்ட கிராமத்து மக்களுக்கும் கொள்ளையர்களுக்கும் தேவதையாக காட்சியளித்து, அவளை வணங்கும் படி செய்தது. அந்த அழகை சிறப்பு செய்யும் விதமாக, அவளின் தந்தை பூர்விகமாக

 **ISBN Number: 978-81-992374-8-3**

வீட்டிலுள்ள மாணிக்கக் கற்களைக் கொண்டு அவளுக்கு மாணிக்க மாலை செய்ய தீர்மானித்து, மேலும் சில மாணிக்கங்களை வாங்குவதற்கு ரத்தின வியாபாரியை அழைத்துக் காட்டினார். அப்போது தற்செயலாக அங்கு வந்த சென்னாதேவி, வியாபாரிகளின் தாடியையும், பருத்த விழிகளையும், புரியாத மொழியையும் கேட்டு சிரிக்கிறாள். சென்னாவின் அழகைக் கண்ட அவர்களில் ஒருவன் கைகளை மேலே உயர்த்தி, ஆசிர்வதிப்பது போல் செய்கிறான். பின்னொரு நாள் வியாபாரிகளைப் போலவே, துலுக்க ராஜாவின் கையாட்கள் வந்து சென்னாவைப் பெண் கேட்கின்றனர்.

சென்னாவின் தந்தையார் மறுத்தாலும் கட்டாய மணம் முடித்துவிடுவதாகப் பயமுறுத்தியதால் சென்னாவின் பாட்டி திருப்பதி ஸ்ரீனிவாச மூர்த்தியை வணங்கி, பூக்கட்டிப் பார்த்து திருமணத்திற்கு சம்மதிக்கின்றனர். சென்னாவை அலங்கரித்து, விடிந்தால் திருமணம் என்னும் நிலையில் அவர்களுக்கென அமைக்கப்பட்ட பந்தலுக்கருகில் வெட்டிய பசுமாட்டின் தலையையும், அவர்கள் தெய்வமாகப் போற்றும் பசுவை கொன்று சமையல் செய்திருந்த நிலையையும் கண்டவுடன் தப்பி ஒடிப் போகவும், தெற்கு நோக்கு இடம் பெயரவும் தீர்மானிக்கின்றனர். **“தனது மகள் இவ்வளவு அழகாய் இருக்காளே என்று பெருமைப்பட்ட சென்னாவின் தாய், ஐயோ இவள் ஏன் இவ்வளவு அழகோடு பிறந்தாள் என்று கண்ணீர் விட்டாள்” (கோபல்ல கிராமம், ப. 49)** எனும் கூற்றின் மூலம் கம்மவார் மக்களின் இடப்பெயர்வுக்கு சென்னாதேவியின் அழகும், துலுக்க ராஜாவின் பெண்ணாசையுமே காரணம்.

**கோபல்ல கிராமம்**

ஆந்திராவிலிருந்து புலம் பெயர்ந்த கம்மவார்

 ISBN Number: 978-81-992374-8-3

இனமக்கள் தெற்கு நோக்கி கோவில்பட்டிக்கு அருகே உள்ள குருமலைக்கு அருகே ஒரு கள்ளிக்காட்டை தேர்ந்தெடுத்து அங்கு வசிப்பதற்கு ஏற்ற சூழலை உருவாக்கிக் கொள்ள முயன்றனர். அப்போது தண்ணீர்க்காக ஒரு ஆழமான பள்ளத்தை வெட்டியுள்ளனர். அப்பள்ளத்தில் சிறதளவு தண்ணீர் இருந்தது. அந்தப் பள்ளத்தில் தான் தண்ணீர் எடுப்பார்கள். ஒரு நாள் மாலை அந்தப் பள்ளத்தில் நிறைமாத சினையுடன் மாடு ஒன்று விழுந்து நன்றாக சிக்கிக்கொண்டது. அதனை மீட்கும் முயற்சியில் இளைஞர்கள் ஈடுபட்டனர்.

> **இளவட்டங்கள் பலர் பசுமாட்டைக் கரையேற்ற சகதிக்குள் இறங்கினார்கள். மாட்டின் நான்கு கால்கள் பூராவும் தெரியாதபடி அடிவயிருக்கும் மேலேயே அது சகதிக்குள் புகுந்து திணறிக் கொண்டிருந்தது. அந்த நிலையிலும் அந்தப் பசு தன் அருகே அவர்களை நெருங்க விடாமல் ஆங்காரமாய் சீத்தடித்தது. ஒரு மனிதக் கைகூட அதன் மேல் இதுவரையும் படாமல் பிறந்ததிலிருந்து தன்னிசையாக மேய்ந்து திரிந்து வளர்ந்த சுதந்திரமான காட்டுப்பசு அது. காட்டுக் கொடிகளால் திரிந்த பலமான கயிற்றினால் அதற்கு முதலில் ஒரு மூக்கணி போட்டனர். பாட்டி கரையிலிருந்து கொண்டு சத்தம் போட்டுச் சொன்னாள். பிள்ளைகளே மூக்கணியினால் மாட்டை அடக்க முடியாது. இது காட்டு மாடு. அந்த நிலையிலேயே அதை வைத்துக் கொண்டு அதற்கு முக்கைக் குத்தி மூக்கணாங்கயிறு பூட்டி விடுங்கள் (கோபல்ல கிராமம், ப. 103)**

 **ISBN Number: 978-81-992374-8-3**

என்று மாட்டிற்கு முக்காணங்கயிறு போட்டு இழுத்து மேலே கொண்டு வந்து விடுகிறார்கள். இல்லையென்றால் அதனை அடக்கி விட முடியாது. பசு கன்றை ஈன்றது. பின்னர் பசுமாடு காட்டை நோக்கிப் போகாமல் இருந்து கொண்டது.

> **இனி பசுமாடு காட்டைப் பார்த்து ஓடாது; கண்ணுக்குட்டியை மாத்திரம் நாம் பாத்துக்கிடணும் அவ்வளவுதான். கோயிற்தப்பா, அந்தப் பசுமாட்டோடு மகாலட்சுமியும் இந்தக் கிராமத்துக்கு அண்ணைக்கே வந்துட்டா. அது வந்த வேளை ஊர் நிறைய பசு மாடுகளாகப் பெருகிட்டது. கோபல்ல என்று பேர் வந்ததே இந்தக் கிராமத்துக்கு அந்தப் பசுமாடுதான் காரணம் (கோபல்ல கிராமம், ப. 104)**

என்று கோபல்ல கிராமத்திற்கு பெயர் வந்த கதையைப் பற்றி மங்கத்தாயாரு பாட்டி மூலமாக கி.ரா கூறியுள்ளார்.

**கம்மவார் மொழி**

மனிதர்கள் தங்கள் கருத்தையும், உணர்வையும் வெளிப்படுத்தித் தங்களுக்குள் தொடர்பு கொள்ளப் பயன்படுத்தும் கருவியாக மொழி விளங்கினாலும், புவியியல் சூழலுக்கு ஏற்பவும், சமூகப் பண்பாட்டுக் குழுவுக்கு ஏற்பவும் மக்களுக்கு மக்கள் பேசும் மொழியும் வேறுபடுகிறது. ஆந்திர தேசத்தில் நிலவுடைமைச் சமூகமாக வாழ்ந்த கம்மவார் இன மக்கள் தெலுங்கு மொழியைப் பேசி வந்துள்ளனர். அவர்களின் இடப்பெயர்வின்போதும் தெலுங்கு மொழியையே பேசி வந்துள்ளனர். கம்மவாரின் இடப்பெயர்வின்போது அவர்களுக்கு உதவி செய்த கோவய்யா, **“ரண்டி, ரண்டி (வாங்கோ வாங்கோ)" (கோபல்ல கிராமம், ப. 68)** எனத் தெலுங்கில் அழைத்து அவர்களுக்கு அடைக்கலம்

 **ISBN Number: 978-81-992374-8-3**

கொடுத்ததும், குதிரைப்படை வீரர்களிடமிருந்து இவர்களைக் காப்பாற்றிய குட்டையான உருவம் கொண்ட சித்து மனுஷியைக் குறிப்பிடும்போது, **"கிளி கொஞ்சுற மாதிரி இருந்தது அவளுடைய தெலுங்கு உச்சரிப்பு" (கோபல்ல கிராமம், ப. 70)** எனக் கூறுவதன் மூலம் தெலுங்கு மொழியையே இவர்கள் பேசி வந்தது தெரிய வருகிறது.

இடம்பெயர்ந்த தமிழகப் பகுதிகளில் மக்கள் பேசிய தமிழ்மொழி இவர்களுக்கு புதிதாகத் தோன்றி,

> **முதலில் அவர்களுக்குக் கொஞ்சம் சங்கடமாக இருந்தாலும் நாளாவட்டத்தில் அதெல்லாம் சரியாகி விட்டது. இவர்கள் இருதரப்பிலும் குழந்தைகள், பெண்கள் இவர்களே ஒருவர் மொழியை ஒருவர் பேசுவதற்கு சீக்கிரம் கற்றுக் கொண்டார்கள் (கோபல்ல கிராமம், ப. 109)**

என கி.ரா. இப்புதினத்தில் சுட்டுகிறார்.

**உணவு**

வேளாண்மைத் தொழிலே கரிசல் மக்களின் முதன்மையான தொழிலாகும். எனவே அம்மக்களின் உணவுப் பழக்கமுறையானது அவர்கள் வாழும் நிலம், அந்த நிலத்தில் விளையும் பயிர், அந்நிலத்தின் தட்பவெப்ப நிலைகளுக்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளது. கிடைத்தவற்றை உணவாக்கிக் கொள்ளுதல் என்ற நிலையிலேயே கரிசல் மக்கள் வாழ்ந்துள்ளதை,

> **ஆந்திராவிலிருந்து புலப்பெயர்வு அடைந்த கரிசல் மக்கள் நாடோடி வாழ்க்கை முறையை மேற்கொண்டு காட்டைத் திருத்தியபோது கிடைத்த சேணைக் கிழங்குகள், கோரைக் கிழங்குகள், காட்டுக் கீரைகள் முதலான இயற்கை**

 ISBN Number: 978-81-992374-8-3

**உணவுகளை சமைத்தும், சோற்றுக் கற்றாழையைத் தோலுரித்து நீரில் அலசி கசப்பை நீக்கியும் உண்டனர் (கோபல்ல கிராமம், ப. 97)**

என்பதை கி.ராவின் படைப்பின் மூலம் அறிய முடிகிறது. கரிசல் நிலத்தில் பஞ்சகாலத்தில் உணவுக்காக மக்கள் போராடினர். சித்திரை, வைகாசி மாதங்களைப் பஞ்சகாலமாகக் குறிப்பிடுகின்றனர். பஞ்சகாலத்தில் அரசாங்கம் கொடுத்த உணவு குறித்து 'அக்னி நட்சத்திரம்' என்ற கதையில்,

**பஞ்சத்திற்கு ரேசன் கடையில் பட்டாணிப்பயிறு போடுகிறார்கள். பிண்ணாக்கு மாவும் பட்டாணிப்பயிறும் மட்டுமே ஜீவனை வைத்திருக்கக் கிடைத்திருக்கிறது. போன அக்னிநட்சத்திரத்தில் குச்சிக்கிழங்கு மாவும் சீனிக்கிழங்கும் கிடைத்தது. பட்டாணி அவிப்பதற்கு ஒரு கவைமுள் தேவைப்பட்டது. அவித்துச் சாப்பிட்டாலும் வயிற்றுவலி வந்தது (பா.செயப்பிரகாசம், அக்னிநட்சத்திரம், பா.செயப்பிரகாசம் கதைகள், ப. 1724)**

என்று பா. செயப்பிரகாசம் கரிசல்மக்கள் மிகுந்த வறுமைத் துயரத்திற்கு உள்ளானார்கள் என்பதை கூறியுள்ளார். கரிசல் நிலங்களைத் திருத்தி, தாங்கள் விளைவித்த கம்பு, கேப்பை, சாமை, வரகு, குதிரைவாலி, தினை, சோள வகையான செஞ்சோளம், நாத்து சோளம், மாப்பிள்ளை மினுக்குச் சோளம் முதலிய தானியங்களை உணவாக உட்கொண்டுள்ளனர்.

காலப்போக்கில் நெல்லரிசிச் சோற்றையே விரும்பும் சூழலும் ஏற்பட்டது. கரிசல் வட்டார நிலங்கள் வானம் பார்த்த பூமிகளாக இருப்பதால் விளைச்சல் ஒரு போகம்தான் விளையும். நெல்லுச்சோறு என்பது இந்த

 **ISBN Number: 978-81-992374-8-3**

மக்களின் கனவாக இருந்துள்ளது. கி.ராவின் கூற்று நெல்லுச்சோற்றை கரிசல் பகுதி மக்கள் பெரிதும் விரும்பினர் என்பதை உணர்த்துகிறது. கரிசல் காட்டில் வேலை நடைபெறும் நாட்களில் காலை உணவை பத்து மணிக்கு மேல் உண்பர் என்பதை அறிய முடிகிறது. காலை எழுந்தவுடன் இம்மக்கள் அருந்தக்கூடிய முதல் பாணமான நீராகாரத்தைக் குடித்து விட்டு உடல் வியர்வை நிலத்தை ஈரமாக்கும் அளவிற்கு உழைக்கின்றனர்.

**முடிவுரை**

கி.ராவின் படைப்புகளைப் படிகின்ற போது கரிசல் மண்ணில் பிறந்த வாசகர்கள் அத்தனைபேருக்கும் தங்கள் மண்ணையும் அனுபவத்தையும் இப்படியும் கலை நயத்துடன் படைக்க முடியுமா என்ற வியப்பு. ஏற்படுவதோடு மட்டுமின்றித் தங்களையே அப்படைப்பில் கண்டு பிரமிப்பும் அடைவார்கள் என்பது தான் நிதர்சனமான உண்மை. அவ்வகையில் கிராமிய மணம் குன்றாமல் மண் வாசனையோடு மக்களின் வாழ்வியலைத் தம் படைப்பாக்கத்தில் கொண்டு வந்து வெளிப்படுத்திய கி.ரா அவர்கள் கரிசல் எழுத்தாளர்களுக்கெல்லாம் முன்னத்தி ஏர் என்றால் அது மிகையாகது.

**துணைநூற்பட்டியல்**

[1] பக்தவசல பாரதி, சீ., பண்பாட்டு மானுடவியல் மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்- 600001, 2009.
[2] சிங்காரவேலன், பா., இடப்பெயர்ச்சிக் கதைகள், காவ்யா வெளியீடு, சென்னை, 2006.
[3] சிவசுப்பிரமணியன், ஆ., இனவரவியலும் தமிழ் நாவலும், நீயூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2014.

 **ISBN Number: 978-81-992374-8-3**

[4] ராஜநாராயணன், கி., கரிசல் காட்டுக் கடுதாசி, அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர், 2007.

[5] ராஜநாராயணன், கி., கோபல்ல கிராமம், அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர், 2007.

[6] ராஜநாராயணன், கி., கோபல்லபுரத்து மக்கள், அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர், 2007.

[7] இராஜநாராயணன், கி., கி.ராஜநாராயணன் கதைகள், அகரம் பதிப்பகம், தஞ்சாவூர், 2002.

[8] செயப்பிரகாசம். பா. பா.செயப்பிரகாசம் கதைகள், அகரம் பதிப்பகம், கும்பகோணம், 1998.

# 2

# சமுதாய நோக்கில் சாகித்ய அகாதமி விருதுபெற்ற திலகவதியின் *கல்மரம்* நாவல்

**முனைவர் சு. ஏஞ்சல் ஜெயலெட் ராணி**, உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
கருங்கல், கன்னியாகுமரி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0003-5792-9486**

## முன்னுரை

ஓர் எழுத்தாளன், அனுபவங்களின் தாக்குதலால் உண்டான சிந்தனைகளின் பின்னணியில் படைப்புகளைப் படைக்கும் போது அது சமுதாயம் சார்ந்த கருத்துக்களையே தன்னுள் அதிகமாகக் கொண்டிருக்கிறது எனலாம். இதற்குத் திலகவதி அவர்களும் விதிவிலக்கல்ல. இதுவரையிலும் எந்தவொரு படைப்பாளனும் வெளிக் கொணராத, உலகிற்கு வெளிகாட்டப்படாத, இலக்கியப் படைப்புகளின் வழியாகப் பார்வைக்கு வராதமுறையில் உள்ள ஒன்றே கட்டிடத் தொழிலாளர்களின் வாழ்க்கை முறை. இதையே தன்னுடைய ‘கல்மரம்’ என்னும் நாவலின் கருவாகக் கொண்டிருக்கிறார் திலகவதி அவர்கள்.

அறிவியல் கண்டுபிடிப்புகளின் தாக்கத்தால் 20-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தான் தமிழ்நாட்டில் அதிகமான எண்ணிக்கைகளில் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. இதன் வாயிலாகத் ‘தொழிலாளர்’ என்ற ஒரு பிரிவு உருவானது. இதற்கடுத்த காலகட்டத்தில்

 **ISBN Number: 978-81-992374-8-3**

பரவலான கல்வியும், வேலைவாய்ப்பும் உருவான போது 'நடுத்தரவர்க்கம்' என்ற மற்றொரு பிரிவும் உண்டானது. இவ்விரு பிரிவு மக்களின் பெருங்கனவாக இருப்பது வீடு. நடுத்தர மக்களின் பேராசையால் விளைநிலங்கள், நீர் நிலைகள் வீட்டுமனைகளாகி, காங்கீரீட் கட்டிடங்களாக மாறிவருகின்றன. நடுத்தர மக்களின் ஆசையைக் கட்டிட ஒப்பந்தக்காரர்களும், ரியல் எஸ்டேட் முதலாளிகளும் பணமாக சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தந்திரமான தொழிலுக்கிடையில் சிக்கிக் கொண்டு பரிதவிப்பது நடுத்தர வர்க்கத்து மனிதர்கள் மட்டுமின்றி, கட்டிடத் தொழிலாளர்களும் தான்.

கிராமத்தில் மழைபொய்த்தால் விவசாயம் இல்லை. இதனால் கொடிய வறுமை நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். கூலி வேலைக்குச் செல்ல வழியில்லாமல் பிழைப்புத் தேடி நகரத்தை நோக்கி வரும் இம்மக்களை வரவேற்பது போல் அமைந்து விடுகிறது கட்டிடத்தொழில். இப்படிப் பிழைப்புத் தேடி நகரத்திற்கு வந்து அதாவது சென்னைக்கு வந்து அல்லல்படும் கட்டிடத் தொழிலாளர்களின் வாழ்க்கையையும் அவர்கள் எதிர்கொள்ளும் இன்னல்களையும், பிரச்சனைகளையும் இவ்வுலகிற்கு சமுதாய அக்கறையோடு எடுத்துக் காட்டுகிறார் ஆசிரியர்.

**நாவலில் வெளிப்படும் சமுதாயக் கருத்துக்கள்**

சென்னை நகரத்துக்குப் பிழைப்புத்தேடி வரும் மக்கள் கட்டிடத் தொழிலாளர்களாகி அங்கேயே தங்கி விடுகிறார்கள். வறுமையில் வாடும் இம்மக்கள் தங்கள் மகிழ்ச்சியிலும், உற்சாகத்திலும் கூட வறுமையையே கடைப்பிடிக்கிறார்கள். தங்களுக்கு ஏற்படும் துன்பங்களையும், சிக்கல்களை-யும்கூட சாதாரணமாகவே எடுத்துக் கொள்ளும் மனப்பக்குவமுடையவர்கள்.

 **ISBN Number: 978-81-992374-8-3**

அதேபோல் நம்பிக்கையும், தியாகமும் மற்றவர்களைச் சிந்திக்க வைக்கக் கூடியவை. அரசியல் கட்சித் தலைவர்களுக்காகச் சொந்த பந்தங்களையே வெட்டிச்சாய்க்கத் தயங்காதவர்கள்.

**அடிமைத்தொழிலாளர்கள்**

உடல் உழைப்பு மொத்தத்தையும் முதலாளிகளுக்குக் கொடுத்து விட்டு கூலிக்காகக் காத்துக்கிடக்கும் இவர்களின் நிலை அவலமானது. கட்டிட ஒப்பந்தக்காரர்களிடம் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் கொத்தடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். வேலை செய்யும் இடங்களில் விபத்து ஏற்பட்டு, கைகால் ஊனமானால் எந்த விதமான நஷ்டஈடுகளும் அவர்களுக்குக் கிடைப்பது கடினம். மேஸ்திரிகளான கொத்தனார்களின் சீண்டல்கள், உரிமை மறுப்பு போன்றவற்றிற்கிடையில் ஒரு நாள் பொழுது போவதே கடினமாக இருக்கின்றது. சித்தாள் வேலை செய்யும் பெண்களின் நிலை மோசமானதாகவே காணப்படுகிறது. கணவன் மட்டுமே கட்டிட வேலை செய்யும் குடும்பத்தில், அவனுக்குப் பிறகு அந்தத் தொழிலைத் தன் பிள்ளைகள் செய்ய அவனோ, அவளோ விரும்புவதில்லை. அடுக்குமாடிக் கட்டிடங்கள் கட்ட விரும்பும் முதலாளிகள் அதைக்கட்டும் தொழிலாளர்களின் உயிரைப் பற்றிக் கவலைப் படுவதில்லை. இலாபம் ஒன்றையே நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றனர். தொழிலாளர்களுக்கு வேலை செய்யும் இடத்தில் அடிபட்டு விட்டால் அவர்களுக்காக இரக்கப்படுவதை விட்டுவிட்டு, வேலை தடைபடுகிறது என்பதற்காகவே வருத்தப்படுகின்றனர். வேலை வாங்கும் போது தேனொழுகப் பேசும் முதலாளிகள், விபத்து ஏற்படும்

 **ISBN Number: 978-81-992374-8-3**

போது சிடுசிடுப்பாகப் பேசும் மனிதத்தன்மையற்ற குணமுடையவர்களாகவே காணப்படுகின்றனர்.

**வர்க்கப் போராட்டம்**

வெளியூர்களிலிருந்து ஆட்களை அழைத்துக் கொண்டு வந்து கட்டிடம் கட்டும் இடத்துக்கருகிலேயே குடியமர்த்தி வைத்து, குறைந்த சம்பளத்தைக் கொடுத்து அதிக வேலை வாங்க வைக்கும் முதலாளிகள். ஓடாய் உழைக்கும் தொழிலாளர்கள். வேலை நடைபெறாத மழைக்காலங்களில் பட்டினி கிடக்கும் தொழிலாளர்களைக் கண்டும் காணாதது போல் செல்லும் மனிதாபிமானமற்ற முதலாளி வர்க்கங்கள் இன்றைய சமுதாயத்தில் காணப்படுகிறார்கள். கட்டிட வேலை செய்யுமிடத்தில் உடன் வேலை செய்யும் பணியாளரைத் தேள் கொட்டியவுடன், தொழிலாளியுடன் மருத்துவ மனைக்குச் சென்ற சக பணியாளரை முதலாளி திட்டுவதும், அதை எதிர்த்துத் தொழிலாளர்கள் வேலையை நிறுத்துவதும், பிறகு முதலாளி வருத்தப்படுவது போல் பேசி அவர்களைத் தன்வசத்திற்குக் கொண்டு வருவது போன்ற நிகழ்வுகள் இன்றும் நம் சமுதாயத்தில் காணப்படுகின்றன. தொழிலாளர்கள் தங்கள் சக்தியை வேலை நிறுத்தத்தின் மூலம் தான் வெளிப்படுத்துவார்கள் என்பது லெனின் கூற்று. இக்கூற்றை உண்மையாக்கும் விதமாக திலகவதி அவர்கள் தமது நாவலை அமைத்துள்ளார்.

மகன் வேலை செய்யாமல் விட்டேற்றியாக நடக்கும் நேரத்தில், திருமணம் செய்து வைத்தால் எல்லாம் சரியாகிவிடும் என்ற சமுதாய மூடப்பழக்கத்தை ஆதிலட்சுமி – காசி (மகன்) என்னும் கதாப்பாத்திரத்தின் வழியாக ஆசிரியர் வெளிக்காட்டுகிறார். கட்டிட வேலையிலும் பல்வேறு கட்டடங்களைத் தாண்டித்தான்

 **ISBN Number: 978-81-992374-8-3**

உயர்நிலைக்கு வரமுடியும். அங்கேயும் எடுபிடி-ஆள்பிடி-லஞ்சம் என்பவை இருந்தால் தான் ‘மேஸ்திரி’ என்ற பட்டம் கிடைக்கும். இக்கருத்தை காவேரி என்னும் கதாப்பாத்திரத்தின் வழியாக ஆசிரியர் படம்பிடித்துக் காட்டுகிறார். “வருஷக்கணக்கா எல்ப்பரா இருந்து, பெரியாளாயி கொத்தனாரு கையிலே தாஜா பண்ணி, அவர அப்பான்னு, அண்ணான்ணு கெஞ்சி, கைக்காசப் போட்டு அவருக்கு காப்பின்னும், பீடின்னும், நாஷ்டான்னும் வாங்கிக் குடுத்து, அவங்க பீடி புடிச்சுக்னுன்னு நிக்கச் சொல்ல, கொல்லுரு எடுத்து, கொஞ்சம் கொஞ்சமா வேலபழகி அரக்கொத்தனாராயி முழுக்கொத்தனாராயி அப்பாலே தான் மேஸ்திரியாவணும்” என்ற காவேரியின் கூற்று இக்கருத்தை மெய்ப்பிக்கின்றது.

**சமுதாயம்**

ஏழை மற்றும் அடித்தட்டு மக்கள் அரசாங்கத்தின் ரேசன் கடையையே அரிசிக்கு நம்பியிருக்கிறார்கள். அங்கும் ஊழல் தலைகாட்டுகிறது. அரசு நிர்ணயித்த விலையை விட அதிக விலைக்குப் பொருட்களை விற்பது போன்ற சமுதாய நிகழ்வுகளை, “ரேசன் கடையில் வாங்குகிற பன்னிரெண்டு கிலோ அரிசியே மாதம் முழுவதற்கும் வருவதில்லை, மண்ணெண்ணெயும் அப்படித்தான். பற்றாக்குறையை இட்டுக் கட்டுவதற்கு வெளிமார்க்கெட்டில் வாங்குவதே பெருஞ்செலவாக இருந்தது. இத்தனைக்கும் மண்ணெண்ணெய் ஸ்டாக் இல்லை என்று கடையில் அறிவுப்புப்பலகை எதுவும் இருக்காது. சில கடைகளில் தகரம் மின்னுகிற பழைய கரும்பலகையில் ஈர சாக்பீசால் எழுதப்பட்ட விலைப்பட்டியல் ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் நாலரை ரூபாய் என்று அறிவிக்கும். ஆனால் கடைமுதலாளி

 **ISBN Number: 978-81-992374-8-3**

ஒன்பது ரூபாய்க்கான சில்லறையைக் காட்டினால் தான் ஒரு லிட்டர் மண்ணெண்ணெயைக் கண்ணில் காட்டுவான். இந்த நிலைமையில் ரேஷனை விட்டுவிடவும் முடியாது'' என்று ஆதிலட்சுமி என்ற கதாபாத்திரத்தின் வாயிலாக சமுதாய நிகழ்வுகளை ஆசிரியர் சித்தரித்துக் காட்டுகிறார்.

**மூடப்பழக்கங்கள்**

நாகரிகம் வளர்ந்து உலகம் எவ்வளவுதான் மாறிக் கொண்டிருந்தா-லும், சமுதாயத்தில் அடித்தட்டு மக்களிடையே மூடப்பழக்கங்கள் இன்னும் இருந்து கொண்டுதான் இருக்கிறது என்னும் கூற்றைக் கன்னியம்மாள் என்னும் கதாப்பாத்திரம் வாயிலாகச் சித்தரித்துக்காட்டுகிறார். கன்னியம்மாளும் அவள் நாத்தனாரும் ஒரே சமயத்தில் கருவுற்றிருக்கிறார்கள். தலச்சன் புள்ளக்காரிங்க ரெண்டுபேரும் ஒருத்தர் மூஞ்சியில் ஒருத்தர் முழிக்கக்கூடாது என்று கூறி கன்னியம்மாளை வீட்டுக்குப் பின்புறம் ஓலப்படல வச்சி மூடிவிடுகிறார்கள். தனது உடல் உபாதைகளைத் தீர்க்கவும், அடுத்தவர் அனுமதியை நாடி இருக்கிற சூழ்நிலை உருவாகிறது. இம்மூடப்பழக்கங்கள் சமுதாயத்திலிருந்து ஒழிக்கப்பட வேண்டுமென்பதே ஆசிரியரின் கருத்தாகும்.

**அறியாமையில் மூழ்குதல்**

சிறு பெட்டிக்கடைகளின் முன்னால் உட்கார்ந்து அரசியல் பேசும் சாதாரண மக்கள், தங்கள் அறியாமையினால் அவர்கள் செய்யும் சிறுசிறு மேலோட்டமான செயல்களினால் அவர்களைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுகிறார்கள். "இன்னா இது பேரு, நல்லாவாக்கீது? நேத்து எங்க தலவரு மீட்டிங்கிலேயே சொல்லிட்டாரு. இனிமே இந்த

 **ISBN Number: 978-81-992374-8-3**

பேட்டைக்கு முத்தமிழ் நகர்ன்னு பேர் வைக்கிறேன்னு. இன்னேரத்துக்குள்ளே சிமிட்டி, சிலாப் தூக்கி பளீர்னு பெயிண்ட்கூட அடிச்சிருப்பாங்க. இப்ப நேரமில்லன்னா ராத்திரி வந்து பாரு. லைட்டு கிய்ட்டு எல்லாம் போட்டு ஜோராயிருக்கும் என்ற பேச்சிற்குத் தடையாய் வந்து விழுந்தது சின்னத்தாயியின் குரல்.அடச்சீ! எளுந்து போயி கையக்கழுவுங்கடா போமானிப் பசங்களா! குழாயிங்கீழே முழங்காலு வரிக்கும் தண்ணி நிக்குது. அதுக்கு மேலே செங்கல்லு அடுக்கிக் கொடத்த வைக்கிறோம். அங்க போடுங்களேன் சிமிட்டிய, ரோட்டுல வெளக்குகீதா? ஒரே வாரத்துல பூடுது, அங்க போடுங்களேண்டா லைட்ட, பேசறாங்க பேச்சு'' என்ற உரையாடல் மூலம் சமுதாயத்தின் நிலையையும், அவர்களின் விருப்பத்தையும் எடுத்துக்காட்டுகிறார் ஆசிரியர்.

**சமுதாய மறுமலர்ச்சி**

கல்மரம் நாவலில் குறிப்பிடப்படும் கட்டிடத் தொழிலாளர்கள் வாழும் பகுதியில் தரைக்கிணறு ஒன்று இருந்தது. அது வருஷத்துக்கு ஒரு உயிரைப் பலி வாங்கும் அளவுக்கு சுற்றுச்சுவர் எழுப்பப்படாமலேயே இருந்தது. இந்நிலையில் கட்டிடத் தொழிலாளர்களின் பிரச்சனை குறித்து டாக்டர் பட்ட ஆய்வுக்காக அங்கு வரும் சுசீலா, அம்மக்களுள் ஒருவராகவே மாறி அவர்களுடன் உறவாடி அவர்கள் பிரச்சனைகளைத் தீர்க்க முனைப்படுகிறாள். இதைப்பார்த்த அம்மக்கள் இவ்வளவு வசதியான குடும்பத்தில் பிறந்தவள் பெரிய படிப்புப் படித்தவள். தங்கள் குடிசைப் பகுதிக்கு ஏன் வந்தாள்? தங்களைப் புதிய மதத்திற்கு மாற்றவா? என்ற ஐயப்பார்வை பார்க்கும் இடத்தில் சமுதாயத்தின் யதார்த்தம் வெளிப்படுகிறது. இன்றும் யாரேனும் இவ்வாறு சென்றால் அவர்களைச் சந்தேகக் கண்ணோடு பார்க்கும் நிலை சமுதாயத்தில்

 **ISBN Number: 978-81-992374-8-3**

காணப்படுகிறது என்பதை இந்நிகழ்வு எடுத்துக்காட்டுகிறது. “தரைக்கிணறு பிரச்சனைக்காக அப்பகுதி மக்களிடம் சுசீலா சொல்லிப் பார்த்தும் பலனில்லை. அக்கிணற்றை மூடுவதற்காக ஆகும் செலவுக்காகத் தன் வீட்டு வாசலில் ஒரு உண்டியல் கட்டிப் போட்டுப் பார்த்தாள். ஒவ்வொரு குடிசைக்குள்ளும் போய்ச் சொல்லிப் பார்த்தாள். காசு இல்லையென்பதை அப்பகுதி மக்கள் சொல்லாமல் சொன்னார்கள். அவர்கள் வேலைக்குப்போன பெரிய காண்டிராக்டர்களைச் சுசீலா சந்தித்தாள். கொஞ்சம் கல்லும் சிமென்டும் தருவது அவர்களுக்குச் சிரமம் ஒன்றுமில்லை. வேலை முடிந்து திரும்பும் போது ஐந்து செங்கல்லும், பத்துச் செங்கல்லும் அரைப்பை சிமெண்டுமாகக் கொண்டு வந்து சேர்த்ததில் சுமக்கிற சிரமமும் தெரியவில்லை. கல்லும் மண்ணும் தான் நாங்கள் புழங்குகிற பொருள்கள். கொஞ்சம், கொஞ்சமாகச் சேர்த்த கட்டிடப் பொருள்களைச் சேமிக்கிற கிடங்கானது சுசீலாவின் வீடு” இவ்வரிகளின் வாயிலாக ஆசிரியர் சமுதாயத்திற்கு இத்தகைய மறுமலர்ச்சி எண்ணம் கொண்ட புரட்சியாளர்கள் தேவை என்பதை வெளிக்காட்டுகிறார்.

**சேவை மனப்பான்மை**

சமுதாயத்தில் நடக்கும் கேடுகளை, அக்கிரமங்களை, மனிதாபிமானமற்றச் செயல்களைத் தட்டிக்கேட்கும் மனபலம் வாய்ந்தவர்கள் தேவை. சமுதாயத்திற்குத் தங்களால் இயன்ற சேவைகளைச் செய்ய வேண்டும் என்பது ஆசிரியரின் சமுதாயப் பார்வையாகக் காணப்படுகிறது. இக்கருத்துக்-களையெல்லாம் சுசீலா என்னும் கதாப்பாத்திரம் வாயிலாக ஆசிரியர் சமூகத்திற்கு உணர்த்துகிறார்.

 **ISBN Number: 978-81-992374-8-3**

“எதுனா குடுத்திருப்பாங்களா? என்ன பக்கிரி இது. எதோ பாவப்பட்டு போடற பிச்சயச் சொல்றாப்பல சொல்றீங்க. இங்க பாருங்க...... சுதந்திரம் வாங்கிட்டோம்னு சொல்றோம். சுதந்திரமான இந்த நாட்டிலே உழைக்கறது நம்ம கடம. உழைச்சவனுக்கு கெடைக்க வேண்டியத கேட்டு வாங்கறது நம்ப உரிமை. அதுக்கு மேலேயும் போய் உழச்சவனுக்கு ஊதியத்தையும் நல்ல உழைப்பாளிய ஊக்கப்படுத்துறதுக்குச் சலுகைங்கள, பரிசுங்கள் கொடுக்க வேண்டியது ஜனநாயக நாட்டிலே ஒரு அரசாங்கத்துக்குப் பெருமை. அதவிட்டுட்டு ‘எதுனா கொடுப்பாங்க’ன்னு பேசற ஒரு பேச்சா? அப்படிக் கொடுக்கிறதுக்கு அரசாங்கங்கறது ஒண்ணும் அந்தக்காலத்து வள்ளலும் இல்ல, கொடுக்கறத-யெல்லாம் ஏத்துக்கறதுக்கு நாம்ப தன்மானத்த இழந்த பிச்சைக்காரக் கூட்டமும் இல்ல.

வள்ளல்ங்கறவன் ஏதோ ஒரு அற்புதப் பிறவின்னு அவன் முன்னாலே கையேந்தி நின்னு அவனால ஆதாயம் அடைஞ்ச அந்தக் காலத்துப் புலவருங்க எழுதி வச்சுட்டுப் போயிட்டாங்க. அந்த ராஜாவுங்க காலத்துல அப்படி நடந்தத வேணா மன்னிக்கலாம். ஆனா, இப்ப எல்லோரும் இந்நாட்டு மன்னர்னு சொல்லிச் சுதந்திரம் வாங்கி இத்தினி வருஷம் ஆன பின்னாலேயும் இத்தினிபேர் வறுமையிலே தவிக்கிறதும், வர்றதயெல்லாம் ஏத்துக்கறதும், தர்ரவன எல்லாம் வள்ளல்ங்கறதும் அவமானப்பட வேண்டிய விஷயங்க. சரியாச் சொன்னா வள்ளல்ங்கறவங்க யாரு? தங்களப் பெரிய மனுசங்களா காட்டிக்கிட்டு, ஜனங்கள ஏய்க்கறதுக்கும் தங்களுக்கு விருப்பமான நேரத்திலே தங்களுக்குத் தாரதுக்கு சௌகர்யமா இருக்கிற பொருள எடுத்துக் கொடுத்துவிட்டு நெஜமாக் குடுத்ததவிட

 **ISBN Number: 978-81-992374-8-3**

பலமடங்கு அதிகம் குடுத்ததா கணக்குக்காட்டி அந்தத் தொகயவிட அதிகமான தொகய செலவு பண்ணினதா விளம்பரம் செஞ்சு, ஒரு பெரிய கூட்டத்தோட மனசுக்குள்ளே இடம் புடிக்கப் பார்க்கறவங்க. இதுக்கெல்லாம் வசதியா தங்களச்சுற்றி இருக்கிற லட்சக்கணக்கான பேர வறுமக் குழிகளுக்ளேயே வைச்சிருக்கவறங்க. வள்ளலுங்க எல்லாரும் நல்லவங்கன்னு நாம்ப நினைக்கிறோமே அது தப்பு. வள்ளலுங்க அவங்களுடைய வஞ்சகத்தால் வறுமய வளக்கறவங்க. தன்மானமுடைய மக்கள் நாம்பங்கறது உண்மையானா, இப்படி சும்மா எதுனா குடுத்தா வாங்கிக்கலாமுங்கற நெனப்ப முதல்லே ஒழிக்கணும்" என்னும் வரிகளில் ஆசிரியர், சமுதாயம் குறித்தத் தனது கருத்துக்களை வெளிப்படுத்துகிறார் மூடத்தனத்திலிருந்து விடுபடல் ஒன்றுக்கும் உதவாத உபயோகம் இல்லாதவைகளையெல்லாம் தலையில் தூக்கி வச்சுக் கொண்டாடுவது நம் சமுதாயத்தில் காணப்படும் மூடத்தனமான கொள்கை. கோபுரத்து விளக்கு பார்வைக்கு அழகாக இருக்கலாம். அதற்காக எண்ணெய், திரி, எலெக்டிரிசிடி அனைத்தையும் கோபுர விளக்குக்கு மட்டுமே கொட்டிட முடியாது. உண்மையில் கோபுரத்துச் சுடரை விட குடிசைக்குள்ளே எரிகிற விளக்கும், அடுப்புக்குள்ளே எரிகிற நெருப்பும்தான் மனித வாழ்க்கைக்கு மிகவும் பயன்பாடானது. ஆனால் நம் மக்கள் உபயோகமில்லாத-தையெல்லாம் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுகிறார்கள். இந்நிலை சமுதாயத்திலிருந்து மாற்றப்பட வேண்டும்.

மக்களின் அறியாமையையும் வறுமையையும் வேடிக்கையாக்குகிற இளைஞர்களையும் கண்டிக்க வேண்டும். தெருவில் ஏற்பட்ட பள்ளத்தை கல்லையும்

 **ISBN Number: 978-81-992374-8-3**

மண்ணையும் போட்டு நிரப்புவதற்குப் பதிலாக 'இந்தியப் பிரதமர் இதைக் கவனிக்க வேண்டும்' என்று பத்திரிக்கைக்குக் கடிதம் எழுதுகிற கூட்டமும், தேங்கிக் கிடக்கும் நீருக்குப் பக்கத்தில் கொசு வளர்ப்புப்பண்ணை நடத்துகிற அரசாங்கத்துக்கு நன்றி என்று தட்டி நடுபவர்களும், எரியாத தெரு விளக்குகளுக்கு ஈமச்சடங்கு நடத்துபவர்களும் திருத்தப்பட வேண்டும். இதை சுசீலா என்னும் கதாப்பாத்திரத்தின் வழியாக ஆசிரியர் வெளியிடுகிறார். சுசீலா தான் வசிக்கும் பகுதியிலுள்ள பெண்களுக்குத் தன்னம்பிக்கையை ஏற்படுத்துகிறாள். தன்னம்பிக்கை தான் மனிதனுக்கு முக்கியமானது என்று ஆசிரியர் சமுதாயம் வழியாக வெளியிடுகிறார்.

'குடி குடியைக் கெடுக்கும'; என்பது பழமொழி. குடிகாரக் கணவனுக்கு வாழ்க்கைப்பட்ட கன்னியம்மாள், கணவனையோ, கணவனைச் சார்ந்தவர்களையோ எதிர்க்கத் துணிவில்லாமல் தன் தாய் வீட்டுக்கே திரும்பி வருகிறாள். குடிப்பழக்கத்தால் சமுதாயத்தில் பல்வேறு விதமான கேடுகள் ஏற்படுகின்றன.

**தொழிலாளர் நலன்**

கட்டிடத் தொழில் செய்யும் இடத்தில் 'கம்சலை' என்ற பெண்ணின் காலில் கொத்துக்கரண்டி பட்டு விரல் போய்விடுகிறது. இதைப் பார்த்த சக தொழிலாளர்கள் உதவி செய்ய வருகிறார்கள். இதைக் கண்ட கட்டிட உரிமையாளர், இரக்கமில்லாமல் தொழிலாளர்களைத் திட்டுகிறார். கவனமில்லாமல் வேலைசெய்ததால்தான் இப்படிக் காலில் பட்டுவிட்டது என்று கூறுவது வெந்த புண்ணில் வேலை பாய்ச்சுவது போல் அமைகிறது. இது உரிமையாளரின் தொழிலாளர்கள் மீதான அக்கறையின்மையையும், மனிதாபிமானமற்ற

செயலையும் எடுத்துக்காட்டுகிறது. இன்றும் சமுதாயத்தில் இப்படிப்பட்ட நிகழ்வுகள் காணப்படுகிறது.

வேலை செய்யும் ஏழைகள் அன்றாடக் கூலியில் வயிறு நிரப்பும் அன்னாடங் காய்ச்சிகள். அவர்களுக்கு ஏதேனும் கஷ்டம் வருகிற போது முதலாளிகளிடம் உதவி கேட்கிறார்கள். அவர்கள் இரங்கிக் கேட்கிற போது அவர்களை எட்டி உதைக்கும் முதலாளிகள். அவர்கள் வேலையை விட்டுவிட்டுப் போகிறோம் என்றவுடன் ஏதோ நாய்க்குத் தீனி போடுவது போல நூறு இருநூறு கொடுத்து அவர்களை அடக்கும் மானப்பக்குவம். பணத்தைக் காட்டி ஏமாற்றுகிற கூட்டம். இக்கூட்டங்கள் சமுதாயத்தைச் சீரழிக்கிற கூட்டங்கள். இக்கூட்டங்கள் சமுதாயத்திலிருந்து ஒழிக்கப்பட வேண்டும். துன்பப்படும் மக்களுக்கு அதிலிருந்து மீள வழி சொல்லிக் கொடுக்க வேண்டும். அதை விட்டுவிட்டு அவர்களை ஏமாற்றுகிறதை விட்டொழிக்க வேண்டும். முன்னேற்றப் பாதையில், வெளிச்சப்பாதையில் செல்ல இவர்களை சுதந்திரமாக விட வேண்டும். அதைவிட்டு விட்டு அவர்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் மாற்றப்பட வேண்டும். தொழிலாளர்கள் தங்களுடைய பிரச்சனையை உணர்ந்துவிட்டால் பாதி பிரச்சனை முடிந்து விடும். பிரச்சனைக்குத் தீர்வும் கிடைக்கும்.

**அரசியல்**

சமுதாயத்தில் பிரபலமாக வேண்டும். தன் பெயரைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். தன் செல்வாக்கு உயரவேண்டும் என்பதற்காகத் தங்கள் இதயத்தையே குழிதோண்டி புதைக்கும் இளைஞர்கள் இன்றைய உலகில் காணப்படுகிறார்கள். இந்த இயந்திரத்தனமான, உணர்ச்சிகளற்ற முடிவுகளை

 **ISBN Number: 978-81-992374-8-3**

இளைஞர்கள் குழிதோண்டி புதைத்துவிட்டு இருளில் மூழ்குவது தெரியாமலேயே வாழ்கிறார்கள். இந்நிலையிருந்து மக்கள் மாறவேண்டும்.

“அண்ணா! அவசரப்படாதே! கல்யாணம்ங்கறதெல்லாம் நிதானமா முடிவு செய்ய வேண்டிய விசயம். என்னோட தேர்தல் முடிவு வெற்றிக்கு உன்னோட சொந்த வாழ்க்கையை பலியாக்க வேண்டாம். மாதவி வேற உம்மேல உசுரையே வச்சிருக்காங்க. யாரு வைக்கச் சொன்னதுங்கறேன். தபாரு, நான் இங்கே யாருக்காகவும் வாழலே. என் வாழ்க்கையை பலியாக்கவும் இல்லை. எனக்காக வாழறேன். நாளை ராஜாங்கம் எனதாயிருக்கணும். அதுக்காக வாழறேன். வீணாப் புலம்பாதே! போர்க்களத்தில் ஒப்பாரியா? மாதவி என்னடா மாதவி! எதிரியை இலக்கு வச்சி முன்னேறுகிற போர்ப்படை புண்பட்டவனையும், காயம்பட்டவனையும் போட்டது போட்டாப்பல போட்டுக்கிட்டு போய்க்கிட்டே இருக்கணும்.என்ற கூற்றின் வாயிலாக மேற்கண்ட கருத்தை நிலைநாட்டுகிறார். அரசியல்வாதிகளும் சமுதாயத்தை, அவர்களின் பலவீனம் தெரிந்து மடக்கும் வித்தையைக் கொண்டிருக்கிறார்கள். மதத்தை நம்பும் மக்களை மதத்தின் வாயிலாகவே தங்கள் பக்கம் திருப்பும் கலையை அறிந்து வைத்திருந்தனர்.

‘உன்கையில் உள்ள ஓட்டு ஒரு யோக்கியனுக்கு விழுந்தால் உன் எதிர்காலம் காப்பாற்றப்படுகிறது’. ஒரு அயோக்கியனுக்கு விழுந்தால் அவனது எதிர்காலம் காப்பாற்றப்படுகிறது என்ற கவிஞர் கண்ணதாசனின் கூற்று நிறைவேறும்படி, அரசியல்வாதிகளில் பெரும்பாலானோர் தன்னை நல்லவனாகவும், எதிராளியை அயோக்கியர்களாகவும் காண்பதுதான் இன்று காணப்படும் பிரச்சனைகளிலேயே பெரிய

 ISBN Number: 978-81-992374-8-3

பிரச்சனையாகக் காணப்படுகிறது. இதை உணர்ந்து மக்கள் நல்லவர்களையும் கெட்டவர்களையும் ஆராய்ந்து பிரித்தறிந்து வாக்களிக்க வேண்டும். சாதி-மத வேறுபாடற்ற ஒரு நல்ல ஆட்சியைத் தேர்ந்தெடுக்கும் கடமை சமுதாயத்திற்கு உண்டு என்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

சத்தியமூர்த்தி மக்களின் மனவோட்டத்தை அறிந்து அதற்கேற்ப பிரச்சாரத்திற்கான ஆட்களைத் தேர்வு செய்தான். அவர்களுக்கு உகந்த, அவர்கள் விரும்புகிற பாஷையில் பேசிக் கவர வேண்டுமென்று முடிவெடுத்தான். சர்ச்சுக்கு பக்கத்தில் அமைந்துள்ள சூசையப்பர் விளையாட்டுத் திடலில் மூன்று கூட்டங்கள் வெவ்வேறு தேதியில் ஏற்பாடு செய்தனர். அந்தக் கூட்டங்களில் கலந்து கொள்ள சத்தியமூர்த்தி சென்ற போது மிகக் கவனமாக ஆட்களைத் தெரிந்தெடுத்துப் பேசச் செய்தான். மிஷன் தெருவில் முக்கியமானவரும், செல்வாக்குப் பெற்றவருமான ஜான் சாமுவேலைப் பிரச்சாரக் கூட்டத்துக்கு தலைமை தாங்கச் செய்தான். கல்லூரி நாட்களில் மாணவர் அமைப்பில் பொறுப்பேற்று மொழிப் போரில் அவனுடன் சிறை சென்ற ஆல்பர்ட் சச்சிதானந்தத்தை கிறிஸ்தவ வாக்காளர் நிறைந்த பகுதியில் பொறுப்பாளராக அவன் நியமித்தான்.

“நண்பர்களே! நான் உங்கள் முன் வைக்கும் மன்றாட்டு இதுவே. நான் தாழ்மையானவன். ஆகவே, கர்த்தர் என்னை உயர்த்துவார். நீங்கள் அதற்கு பக்க பலமாய் இருப்பீர்கள் என்று நம்புகிறேன். நானும் பசியுள்ளவன் தான். எவ்வாறெனில் என் மக்களுக்கும், என் மொழிக்கும் தொண்டாற்ற வேண்டுமென்ற பசி. ஆகவே, நீங்கள் வெற்றி எனும் ஐஸ்வர்யத்தினால் என்னை நிரப்புங்கள்”.என்ற சுபாஷின் பேச்சு அரசியல்

 **ISBN Number: 978-81-992374-8-3**

நுட்பம் நிறைந்ததாகக் காணப்படுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைக்கேற்ற யதார்த்தப் பேச்சுக்களை மக்கள் உணர்ந்து, விழிப்போடு செயல்பட வேண்டும். இந்தப் பொய் வேஷங்களைக் கண்டு மக்கள் ஏமாறக் கூடாது. அதைத் தட்டிக்கேட்கும் மனப்பக்குவம் வரவேண்டும். அரசியல்வாதிகள் தங்கள் பேச்சால் கடவுளைக் கூட மாத்திக்காட்டுவார்கள் என்ற சுபாஷின் தாயாரின் பேச்சிலிருந்து அரசியல்வாதிகளில் பலர் பொய்ப் பேச்சுக்கள் வெளிப்படுகிறது.

ஆளுங்கட்சி எதுவாக இருந்தாலும் அவர்களோடு கைகோர்க்கும் கூட்டமே காணப்படுகிறது. இடையில் ஊழல் காரணமாக ஆட்சி கலைக்கப்பட்டதும், அதுவரை வாயை மூடிக்கொண்டு இருந்தவர்கள், உடனே அவர்களுக்கு எதிராகக் கிளம்பி எதிர்க்கட்சிக்கு ஆதரவாகப் பேசி அவர்களோடு இணைந்து விடுவார்கள். இது மனிதனிடம் உள்ள பொல்லாத குணமாகும். இக்குணத்தையும், குணத்தையுடைய மனிதர்களையும் விரட்டியடிக்க சமுதாயம் ஒத்துழைக்க வேண்டும். விரட்ட முன்வர வேண்டும். அப்போதுதான் சமுதாயத்திற்கு நல்லது நடக்கும்.

**காதல்**

சமுதாயத்தில் காதல் என்கிற பெயரில் நடக்கிற அட்டூழியங்களும், ஏமாற்றங்களும் அதிகம். அதன் பெயரில் மனிதன் துவண்டு விடக்கூடாது. ஆண்கள் பணத்துக்காகவும், அந்தஸ்துக்காகவும் எதுவும் செய்யத் துணிவார்கள். இதை சமுதாயத்தில் உள்ள பெண்கள் உணர்ந்து எச்சரிக்கை உணர்வோடு செயல்பட வேண்டும். இதில் ஏமாற்றம் எற்பட்டாலும் துவண்டு விடக்கூடாது. மனத்துணிவோடு வாழ வேண்டும். “காதல் வாழ்க்கையிலே ஒரு அம்சம். அழகான பகுதி. அற்புதமான

 **ISBN Number: 978-81-992374-8-3**

அனுபவம். ஒருத்தரையொருத்தர் நூறு சதம் புரிஞ்சுக்கற நல்ல வாய்ப்பு. சிநேகிதம்ங்கற பூ பழமாய்ப் பழுத்தது மாதிரி. அது எல்லாம் சரி. ஆனால்,காதலே வாழ்க்கை ஆயிடாது. வாழ்க்கை காதலிக்கறதுக்காக மட்டும் இல்லே. உயிர் வாழ்க்கைக்கு ஒரு விளக்குன்னா, காதலுங்கறது அதைத் தூண்டிப் பிரகாசப்படுத்துகிற கருவிதான். கருவி விளக்காகுமா? நம்ம கதைகளும் சினிமாக்களும் காதலைப் பத்தித் தப்பா கத்துக் குடுத்திருக்குது. காதல்லே தோத்துப் போனா ஒண்ணு தற்கொலை பண்ணிக்கிறாங்க. அல்லது தாடி வளர்க்கறாங்க. காதலோட எல்லாமே போய்விடும்? மனுஷனுக்கு மான உணர்வு இருக்கே! அது உயிரோட அல்லவா போகும்? என்ற மாதவியின் கூற்றிலிருந்து சமுதாயத்தில் மனிதர்கள் எப்படி மாறவேண்டும்? மாற்ற வேண்டும் என்னும் கருத்து வெளிப்படுகிறது. இவ்வாறு திலகவதி அவர்கள் தம் கல்மரம் நாவல் வாயிலாக சமுதாயக் கருத்துக்களை வெளியிட்டுப் புதிய சமுதாயம் படைக்க விரும்புகிறார்.

**நிறைவுரை**

அடிமட்டத் தொழிலாளர்கள் உயர்வு பெற்றால் சமுதாயமும் வளர்ச்சியடையும். முதலாளிகள் அடிமட்டத் தொழிலாளர்களின் நலனில் அக்கறை காட்டுவதில்லை. இந்நிலை மாற்றப்பட வேண்டும். ஊதாரித்தனமாகச் சுற்றித்திரியும் மகனுக்குத் திருமணம் செய்து வைத்தால் சரியாகிவிடுவான் என்னும் எண்ணம் கொண்ட தாய்மார்கள் திருந்த வேண்டும். திருத்தப்பட வேண்டும். அரசின் ஏழைமக்களுக்கானத் திட்டங்கள் எந்த இடையூறும் இல்லாமல் அவர்களைச் சென்றடைய வேண்டும். நாகரிகம் வளர்ந்தாலும், மக்களிடம் காணப்படும் மூடநம்பிக்கைகளும், மூடப்பழக்க வழக்கங்களும் ஒழிக்கப்பட வேண்டும். சமுதாய

 **ISBN Number: 978-81-992374-8-3**

அக்கிரமங்களைத் தட்டிக்கேட்கும் ¡தரியம் ஒவ்வொரு மனிதனுக்கும் வரவேண்டும். பாமர மக்களுக்காக, அவர்களின் நலனுக்காகப் போராட சமூக அமைப்புகள் முன்வர வேண்டும். அறியாமையினால் தடுமாறி இருளுக்குள்ளே வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வர முன்வர வேண்டும்.

பொது இடங்களில் காணப்படும் கேடுகளை நீக்க ஒவ்வொரு மனிதரும் முன்வர வேண்டும். சமுதாயத்திற்குத் தங்களால் இயன்ற சேவைகளைச் செய்ய முன்வர வேண்டும். உபயோகமில்லாத செயல்களையும், சொற்களையும், மனிதர்களை-யும் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடும் பழக்கத்தை மக்கள் விட்டொழிக்க வேண்டும். இன்று திருமணம் எப்போது விவாகரத்து? என்ற மனநிலையை மக்களடைந்துள்ளனர். இம்மனப்போக்கு மாற்றப்பட வேண்டும். விழிப்புணர்வு ஏற்பட்டுவிட்டால் எங்கே தங்களை மதிக்கமாட்டார்-களோ என்ற மனப்போக்குடன் அம்மக்களை முன்னேற விடாமல் தடுக்கும் அதிகார வர்க்கங்கள் ஒழிக்கப்பட வேண்டும். ஊழலற்ற, அமைதியான ஆட்சி மலர வேண்டும். அடிதடி, சண்டை சச்சரவு இல்லாத சமுதாயம் உருவாக்கப்பட வேண்டும். சமூகத்தலைவர்கள் அடுத்தவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். இவ்வாறாக சமுதாயம் குறித்தக் கருத்துக்களை கல்மரம் நாவல் வாயிலாக வெளிக்காட்டுகிறார் ஆசிரியர் திலகவதி.

## துணைநூற்பட்டியல்

[1] திலகவதி. *கல்மரம்.* 25ஆவது பதிப்பு, அம்ருதா பதிப்பகம், 2005.

 **ISBN Number: 978-81-992374-8-3**

# 3

# சாகித்ய அகாதமி விருது பெற்ற சிறுகதைகளின் கட்டமைப்பும், சமூக சிந்தனைகளும் (1955-2024)

**முனைவர் ஜே. கோமளா,** உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறை, மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரி, வாணியம்பாடி.
**ORCiD: https://orcid.org/0009-0009-0797-3677**

## முன்னுரை

தற்காலத் தமிழ் இலக்கியங்களாக கருதப்படுகின்ற சிறுகதை குறித்து ஆய்வுகள் காலத்திற்கேற்றவாறு தொடர்ந்து புனரமைக்கப்பட்டு வருகின்றன. புதிய பார்வை, கோட்பாடு சார்ந்த ஆய்வுகளின் பெருக்கம் என மறுவாசிப்பு செய்து வருகிறோம். அதன் அடிப்படையில் சிறுகதையை சமூகவியல் நோக்கில் ஆராயவேண்டியத் தேவை இருக்கிறது. இவற்றை சமூக அசைவியக்கங்கள் வழி ஆராயவும் வாய்ப்பிருக்கிறது. சாகித்திய அகாடமி விருது பெற்ற எட்டு சிறுகதைகளின் கட்டமைப்பையும் அவை குறித்த ஆய்வு தேவையும் எடுத்துச் சொல்வதாக இந்த ஆய்வு கட்டுரை அமைகிறது. உரைநடை வளர்ச்சியின் பயனாக தோன்றிய இலக்கியம் சிறுகதையாகும். உலகின் சிறுகதை அமைப்பிற்கு வித்திட்டவர் எட்கர் ஆலன்போ ஆவார். இந்தியாவில் சிறுகதைக்கு வித்திட்டவர் தாகூர் ஆவார். தமிழ் நவீன சிறுகதைகளின் தந்தை என்றும், சிறுகதை முதல்வர் என்றும் அழைக்கப்படுபவர் வா.வே.சு ஐயர். தமிழில்

 **ISBN Number: 978-81-992374-8-3**

தோன்றிய முதல் சிறுகதை 'குளத்தங்கரை அரசமரம்', 1915 ஆம் ஆண்டு 'விவேக போதினி' என்ற இதழில் வெளியானது. தமிழின் முதல் சிறுகதை தொகுதி 'மங்கையர்க்கரசியின் காதல்' ஆகும்.

**அன்பளிப்பு**

கதைக்காலம் இந்திய சுதந்திரத்துக்குப் பின் பத்தாண்டுகள் எனக்கொள்ளலாம். சென்னையின் மாம்பலத்தில் ஒரு வீட்டில் வயதான அம்மாவும், பத்திரிக்கை அலுவலகத்தில் வேலைபார்க்கும் இளைஞனான அவளது மகனும் வசிக்கிறார்கள். கதைசொல்லி இந்த இளைஞன்தான்.இந்தக் கதையில், செல்வம் மிக்க ஒருவரின் வாழ்க்கையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளையும், அவர்களின் நிலையையும் பற்றி விவரிக்கிறது. அன்பளிப்பு என்பது வெறும் பொருள் அல்ல, அது ஒருவரின் உணர்வுகளின் வெளிப்பாடு என்பதை அழகிரிசாமி உணர்த்துகிறார்.கதை சொல்லும் விதத்தில், வறுமையிலும் அன்பின் வெளிப்பாட்டை வெளிப்படுத்துகிறது. இந்த கதை, அன்பின் ஆழத்தையும், பிரிவுத்துன்பத்தின் வலியையும், மனித உறவுகளின் முக்கியத்துவத்தையும் நமக்கு உணர்த்துகிறது. கு. அழகிரிசாமியின் எழுத்து நடை, எளிமையான வார்த்தைகளில் ஆழமான உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் திறனை இந்த கதை நமக்கு காட்டுகிறது.

**சக்தி வைத்தியம்**

ஒரு மருத்துவரின் பார்வையில் இருந்து எழுதப்பட்டது இந்தக் கதை. மேலும் அது மனிதனின் உடல்நலம் மற்றும் மனநலம் இரண்டையும் எவ்வாறு கவனித்துக்கொள்வது என்பதைப் பற்றி பேசுகிறது. லங்காதேவி, முள்முடி, கங்கா ஸ்நானம், கோதாவரி குண்டு போன்ற சிறுகதைகளும் இச்சிறுகதை தொகுப்பில்

 ISBN Number: 978-81-992374-8-3

இடம் பெற்றுள்ளது.இத்தொகுப்பில் உள்ள கதைகள் மனித உறவுகள், சமூகப் பிரச்சனைகள், மற்றும் வாழ்க்கை அனுபவங்கள் ஆகியவற்றைப் பற்றியும் பேசுகின்றன. ஜானகிராமனின் எழுத்து நடை எளிமையானது, ஆனால் ஆழமானது, மேலும் அவரது கதைகள் வாசகர்களை ஈர்க்கும் திறன் கொண்டவை.

**முதலில் இரவு வரும்**

ஒரு மனிதன் தனது வாழ்க்கையில் எல்லாம் சரியாக இருக்கிறது என்று நினைத்துக் கொண்டிருக்கிறான். ஆனால், எதிர்பாராத விதமாக, அவனது வாழ்க்கையில் பல மாற்றங்கள் நிகழ்கின்றன. அவனது வேலையில் சிக்கல்கள் ஏற்படுகின்றன, அவனது குடும்ப உறவுகள் சீர்குலைகின்றன, மேலும் அவனது நண்பர்களும் அவனது வாழ்க்கையில் இருந்து விலகிச் செல்கின்றனர். இந்த மாற்றங்களால், அவனது வாழ்க்கை இருள் சூழ்ந்ததாக மாறுகிறது. தான் நினைத்த மாதிரி வாழ்க்கை அமையவில்லை என்பதை உணர்ந்தவுடன், அவன் புதிய பாதையை தேடத் தொடங்குகிறான். அப்போது தான், அவனது வாழ்க்கையில் புதிய வெளிச்சம் பிறக்கிறது, மேலும் புதிய மனிதர்களையும், புதிய உறவுகளையும் அவன் சந்திக்கிறான். இந்தக் கதையில், மனிதனின் மன உணர்வுகள், எதிர்பாராத திருப்பங்கள், மற்றும் புதிய தொடக்கங்கள் ஆகியவை அழகாக விவரிக்கப்பட்டுள்ளன. இந்தக் கதை, மனித வாழ்க்கையின் இயல்பான மாற்றங்களையும், புதிய தொடக்கங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. அது மட்டுமின்றி, தனிமையின் வலியை அனுபவித்து, பின் அன்பையும், அரவணைப்பையும் தேடும் மனிதனின் போராட்டத்தையும் காட்டுகிறது.

 **ISBN Number: 978-81-992374-8-3**

**அப்பாவின் சிநேகிதர்**

தந்தையின் நண்பர் ஒருவர் மூலம் ஏற்படும் அனுபவங்கள், அவர்களின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் இந்த சிறுகதையில் விவரிக்கப்படுகின்றன. தந்தையின் நண்பரின் செயல்கள் மூலம் ஏற்படும் சமூக மற்றும் தனிப்பட்ட தாக்கங்களை ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார். இந்த சிறுகதை, நர்மதா என்ற பெண்ணின் வாழ்க்கையை மையமாகக் கொண்டது. அவளுடைய கனவுகள், ஏமாற்றங்கள் மற்றும் சமூக அழுத்தங்கள் பற்றியும் பேசுகிறது. இந்த தொகுப்பில், சாதாரணமாகத் தோன்றும் மனிதர்களின் வாழ்க்கைப் போராட்டங்கள், அவர்களின் எதிர்பார்ப்புகள், மற்றும் சமூகத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் போன்ற பல்வேறு கதைகள் உள்ளன. அசோகமித்திரன் தனது கதைகளில் சாதாரண மனிதர்களை கதாநாயகர்களாகக் கொண்டு, அவர்களின் வாழ்க்கையில் நிகழும் அசாதாரண நிகழ்வுகளை விவரித்துள்ளார். அவர் கதைகள் மூலம் சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள், நம்பிக்கைகள், மற்றும் பழக்கவழக்கங்களை விமர்சிக்கிறார். கதைகளில், மனிதர்களின் அன்றாட வாழ்க்கை, அவர்களின் நம்பிக்கைகள், மற்றும் சடங்குகள் போன்றவை வெளிப்படுத்தப்படுகின்றன.

**மின்சாரப் பூ**

மின்சாரத்தை நம்பி வாழும் ஒரு கிராமத்தின் கதை சொல்லப்படுகிறது. மின்சாரம் வரும்போது மகிழ்ச்சியாக இருக்கும் அந்த கிராம மக்கள், அது போகும்போது சோகமாகிறார்கள். மின்சாரத்தின் வருகை மற்றும் இழப்பு கிராம மக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்தும் தாக்கத்தை கதை விவரிக்கிறது. ஒரு கிராமத்தில் மின்சாரம் புதிதாக வருகிறது.மின்சாரம் வந்ததும், கிராம மக்கள்

 **ISBN Number: 978-81-992374-8-3**

மகிழ்ச்சியடைகிறார்கள். மின்சாரம் மூலம் பல வேலைகளை எளிதாகச் செய்கிறார்கள். ஒரு நாள் மின்சாரம் போகிறது. மின்சாரம் இல்லாததால், கிராம மக்கள் சோகமாகிறார்கள். மின்சாரத்தின் வருகையும், இழப்பும் அவர்களின் வாழ்க்கையை எவ்வாறு மாற்றுகிறது என்பதை கதை காட்டுகிறது. கடைசியாக, மின்சாரத்தின் முக்கியத்துவத்தை கதையில் உணர்த்துகிறது.

**சூடிய பூ சூடற்க**

கிராமிய வாழ்க்கை, மனித உறவுகள், சமூக அவலங்கள் பற்றிய கதைகள் உள்ளன. கதைகளில் அங்கதம், இயல்பு, நகைச்சுவை கலந்திருக்கும். இப்பகுதியில் உள்ள கதைகளின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகுப்பின் தலைப்புக் கதையான இது, ஒரு பெண்ணின் திருமண வாழ்க்கையைச் சுற்றியது. அவள் தன் கணவன் மீது வைத்திருந்த அன்பும், பிறகு அது ஏமாற்றமாக மாறுவதும் இதில் சொல்லப்பட்டுள்ளது.

**உறுமாற்றம்**

ஒரு கிராமத்து மனிதன் நகரத்துக்குப் போய் எப்படி மாறுகிறான் என்றும், அவனது பழைய வாழ்க்கையை அவன் எப்படி மறக்கிறான் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

**நகைச்சுவை**

ஒரு நகைச்சுவை நிறைந்த கதை.இந்தக் கதையில், ஒருவன் எப்படி தனது மனைவியிடம் பொய் சொல்லி சமாளிக்கிறான் என்பதைச் சொல்லுகிறது.

**உறவு**

ஒரு தந்தையின் பாசமும், மகனின் பிரிவும் இக்கதையில் சொல்லப்பட்டுள்ளது.

 **ISBN Number: 978-81-992374-8-3**

**அக்கறை**

ஒரு கிராமத்து மனிதனின் அக்கறையும், அவனது செயல்களும் இந்தக் கதையில், சொல்லப்பட்டுள்ளன. இத்தொகுப்பில் உள்ள மற்ற கதைகளும் கிராமத்து மனிதர்களின் வாழ்க்கை முறையையும், அவர்களின் உணர்ச்சிகளையும் சித்தரிக்கின்றன. இது ஒரு சிறந்த சிறுகதை தொகுப்பு ஆகும்.

**ஒரு சிறு இசை**

ஒரு சிறு இசை என்பது வண்ணதாசன் எழுதிய சிறுகதைத் தொகுப்பு ஆகும். இதில் மொத்தம் 15 சிறுகதைகள் உள்ளன. மனிதர்களின் அன்பு, உறவு மற்றும் முதுமையின் வாழ்வைப் பற்றிய கதைகள் இதில் இடம்பெற்றுள்ளன. மேலும், சில கதைகளில் தாமிரபரணி ஆற்றின் நீர்மையுடன் இசையும் கலந்திருப்பதாகக் கூறப்படுகிறது. வண்ணதாசனுக்கே உரித்தான கவிதை நடையும் தத்துவ உரையாடல்களும் இதில் உள்ளன. மனிதர்களின் உறவுகளும், அன்பும் இக்கதைகளில் ஆழமாகப் பேசப்படுகின்றன. முதியோர்களின் வாழ்வின் பல்வேறு அம்சங்கள் கதைகளில் விவரிக்கப்பட்டுள்ளன. சில கதைகளில் இசையும், தாமிரபரணி ஆற்றின் நீரோட்டமும் பின்னணியாக வருகின்றன.

**சிவப்பு கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை**

சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை" என்பது அம்பை எழுதிய ஒரு சிறுகதைத் தொகுப்பு. இதில் உள்ள கதைகள், சமூகம், வரலாறு, தனிமனித உணர்வுகள், மற்றும் இயற்கையுடன் பின்னிப் பிணைந்த வாழ்க்கையின் வலிகளைப் பேசுகின்றன. முக்கியமாக, இந்தத் தொகுப்பில் உள்ள பல கதைகளில், மரணத்தின் நிழல், புறக்கணிப்பு, வெறுமை ஆகியவை வாழ்க்கையின் தவிர்க்க முடியாத பகுதியாக காட்டப்படுகின்றன. மேலும்,

 ISBN Number: 978-81-992374-8-3

இந்தத் தொகுப்பு, பெண் எழுத்தாளர்கள், பெண்கள் இசை மற்றும் நடனக் கலைஞர்கள் பற்றிய அம்பையின் ஆய்வுகளுடன் தொடர்புடையது.

**தந்தை-மகள் உறவு**

ஒரு தந்தையின் வாஞ்சை மற்றும் மகளின் ஈர்ப்பு பற்றிய கதையுடன் நூல் தொடங்குகிறது. உயிர்ப்பின் தருணங்களில் ஏற்படும் புறக்கணிப்புகள் மற்றும் சலிப்புகள், நினைவுகளாகவும் வலியாகவும் தொடர்கின்றன.

**வன்முறை மற்றும் வெறுமை**

சீக்கியர்களுக்கு எதிரான 1984 கலவரங்களின் பின்னணியில் எழுதப்பட்ட கதை, இரு பெண்களின் நட்பைப் பேசுகிறது. மேலும், வெறுமை சூழ்ந்த வாழ்வில் பற்றிக்கொள்ள ஏதுமின்றி வீழ்வது ஒரு துயரமான தேர்வாக அமைகிறது.

**வரலாறும் நிகழ்காலமும்**

புராணக் கதைகள் மற்றும் இதிகாசங்களின் தொன்மங்களுடன் நிகழ்காலத்தின் பிரச்சினைகள் பின்னிப் பிணைந்துள்ளன. அழிந்துவரும் காடுகளும், இந்திரப் பிரஸ்தம் எழுவதற்காக அழிக்கப்பட்ட காடுகளும், கதைகளில் சித்தரிக்கப்பட்டுள்ளன என்று சொல்வனம் இதழ் குறிப்பிடுகிறது.

**அழகியல் மற்றும் வலி**

பெண்களின் அழகியல் பற்றிய கதைகள், வாழ்க்கையின் வலிகளைப் பேசும் அற்புத கவிதைகளாகவும் உள்ளன.

**சமூகப் பிரச்சனைகள்**

சமூகப் பிரச்சினைகளை, இயற்கையின் தவிர்க்க முடியாத அம்சங்களுடன் இணைத்து அம்பை இந்தத் தொகுப்பில் கதைகளை எழுதியுள்ளார். இந்தத்

 **ISBN Number: 978-81-992374-8-3**

தொகுப்பில் உள்ள கதைகள், மரணத்தின் நிழல், வெறுமை மற்றும் தனிமனித உணர்வுகள் ஆகியவற்றைச் சுற்றிப் பின்னப்பட்டுள்ளன. சமூகம் மற்றும் வரலாறு பற்றிய அம்பையின் ஆழமான புரிதல், இந்தத் தொகுப்பின் கதைகளில் வெளிப்படுகிறது.

**முடிவுரை**

அன்பளிப்பு என்ற சிறுகதையில் மனித உணர்வுகளான போட்டி, பொறாமை, பரிவு, மற்றும் உதவி செய்தல் போன்றவற்றை மையமாக வைத்து எழுதியுள்ளார். சக்தி வைத்தியம் என்று சிறுகதை தொகுப்பில் மனித உறவுகள், சமூகப் பிரச்சனைகள், மற்றும் வாழ்க்கை அனுபவங்கள் ஆகியவற்றைப் பற்றி கூறியுள்ளார். முதலில் இரவு வரும் என்னும் சிறுகதையில் தனிமையின் வலியை அனுபவித்து, பின் அன்பையும், அரவணைப்பையும் தேடும் மனிதனின் போராட்டத்தையும் காட்டுகிறது. அப்பாவின் சிநேகிதர் என்ற சிறுகதையில் சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள், நம்பிக்கைகள், மற்றும் பழக்கவழக்கங்களை விமர்சிக்கிறார். மின்சார பூ என்னும் சிறுகதையில், மின்சாரத்தின் அவசியத்தையும், அது மனித வாழ்க்கையில் ஏற்படுத்தும் தாக்கத்தையும் அழகாக எடுத்துரைக்கிறது. சூடியப்பூ சூடற்க என்னும் சிறுகதை தொகுப்பில் கிராமத்து மனிதர்களின் வாழ்க்கை முறையையும், அவர்களின் உணர்ச்சிகளையும் சித்தரிக்கின்றன. ஒரு சிறு இசை என்னும் சிறுகதை தொகுப்பில் மனிதர்களின் அன்பு, உறவு மற்றும் முதுமையின் வாழ்வைப் பற்றி கூறியுள்ளது. சிவப்பு கழுத்துடன் பச்சைப் பறவை என்னும் சிறுகதை தொகுப்பில் மரணத்தின் நிழல், வெறுமை மற்றும் தனிமனித உணர்வுகள் ஆகியவற்றை கூறியுள்ளது.

 **ISBN Number: 978-81-992374-8-3**

சமகால இலக்கியங்களிலும் இதன் கூறுகளை தேடலாம். இன்றைய இலக்கிய படைப்புகளில் இவை குறித்த பதிவுகள் தேவையானதாகும். தற்போது சமூக பிரச்சனை, சமூக விழிப்புணர்வுப் பற்றி ஆராய வேண்டியத் தேவையிருக்கிறது.

## துணைநூற்பட்டியல்

[1] கு. அழகிரிசாமி. அன்பளிப்பு. பாரி நிலையம், சென்னை - 600001, 2023.

[2] தி. ஜானகிராமன். சக்தி வைத்தியம். ஐந்திணை பதிப்பகம், சென்னை - 600040, 2011.

[3] ஆதவன். முதலில் இரவு வரும். புத்தகப் பட்டறை வெளியீடு, சென்னை, 1986.

[4] அசோகமித்திரன். அப்பாவின் சிநேகிதர். நற்றிணை பதிப்பகம், சென்னை - 600005, 2016.

[5] மேலாண்மை பொன்னுச்சாமி. மின்சாரப் பூ. மெய் நிழல் பதிப்பகம், ஜோலார்பேட்டை, 2022.

[6] நாஞ்சில் நாடன். சூடிய பூ சூடற்க. ஆர்.கே .பிரிண்ட்ஸ், சென்னை, 2016.

[7] வண்ணதாசன். ஒரு சிறு இசை. சந்தியா பதிப்பகம், சென்னை - 600083, 2021.

[8] அம்பை. சிவப்பு கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை. காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில் - 629001, 2022.

 **ISBN Number: 978-81-992374-8-3**

# 4

# *சில நேரங்களில் சில மனிதர்கள்* நாவலில் "கங்கா"

**முனைவர் பீ. பெரியசாமி,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர். சொக்கலிங்கம் கலைக் கல்லூரி,
ஆரணி, திருவண்ணாமலை- 632317, தமிழ்நாடு இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-7395-9699**

## முன்னுரை

தற்கால இலக்கிய வகைமைகளுள் சிறந்ததாக நாவல் இலக்கியம் திகழ்கின்றது. இது நம் பண்பாடு, கலாச்சாரம் மற்றும் சமூகச் செயல்பாட்டை எடுத்துரைக்கின்றது. தமிழில் தோன்றிய பல்வேறு மாற்றங்களைக் காலந்தோறும் நமக்குச் சொல்லிக் கொண்டே பயணித்து வருகின்றது. வரதட்சணை கொடுமை முதல் சமூக மாற்றத்தால் உண்டான கலாச்சார சீர்கேடுவரையிலான பல்வேறு கதைக்களங்களைக் கொண்டு பல்வேறு படைப்பாளிகள் தங்கள் நாவல்களைப் படைத்து வருகின்றனர். சமூகச் சீர்த்திருத்த எண்ணம் கொண்ட ஜெயகாந்தன் இயற்றிய சில நேரங்களில் சில மனிதர்கள் எனும் சாகத்திய அகாதமி விருது பெற்ற நாவலில் கங்கா எனும் கதாபாத்திரம் கொண்டு எவ்வாறு சமூகச் சீர்க்கேட்டை ஆசிரியர் விளக்கியுள்ளார் என்பதை இக்கட்டுரை ஆய்கின்றது.

## நாவல் படைத்தல்

இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடியாகத்

 ISBN Number: 978-81-992374-8-3

திகழ்கிறது. அது வாழ்க்கையை எடுத்துரைக்கும் போது வெற்றியடைகிறது. கலைக்காணதாக அமையும்போது கற்போரின் சிந்தனையைத் தூண்டுவதாகத் திகழ்கிறது. புதினங்கள் என்பது சென்ற நூற்றான்டின் சிறந்த இலக்கிய வகைமையாக அமைந்துள்ளது. இது சமூகம், வரலாறு என்ற இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. இவைகளை நாம் புராணங்களோடும் காப்பியங்களோடும் ஒப்பு நோக்க வேண்டியுள்ளது. அவற்றை போன்ற கட்டமைப்பில் உரைநடையாக இப்புதின இலக்கியம் அமைந்துள்ளது எனில் மிகையாகா.

நாவல் படைப்பதற்கு தன் அனுபவத்தை வெளிப்படுத்த வேண்டும் எனும் எண்ணமே முதன்மையானது என்பதை,

> **தன்னைச் சார்ந்தவர்களுக்கோ தன்னைப் போன்ற மற்ற மனிதர்களுக்கோ என்ன நேருகிறது என்பதை அறிய மனிதனுள் இயற்கையாக இருக்கும் ஆர்வமும், அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள அவனுள் இருக்கும் ஒரு தூண்டுதலுமே கதை பிறக்கக் காரணமாகின்றன என்று கூறுவது மிகையாகாது.(நாவல் வளம், ப.9)**

என்று இரா. தண்டாயுதம் கூறுவதிலிருந்து அறியமுடிகிறது. அதாவது சமூகத்தில் இருக்கும் சக மனிதர்களின் மீதான ஈடுபாடே புதின படைப்பிற்கு அடிப்படை எனலாம்.

நாவல் என்பது காப்பியங்களைப்போல மிகநீண்டதொரு கதை வடிவம் எனலாம். அதன் சிறிய வடிவத்தை சிறுகதை எனலாம். புதினத்தில் பாத்திரப் படைப்புகள் அதிகமாக இருக்கும். கிளைக் கதைகள் இருக்கும். வாழ்வின் ஏற்றத்தாழ்வுகளும் இன்பத் துன்பங்களும் வாழ்வின் போராட்டங்களும் சமூகச்

 **ISBN Number: 978-81-992374-8-3**

சீர்கேடுகளும் நிறைந்திருக்கும் சமகால சிக்கல்களின் ஆதாரமாகவும் விளங்கும். இதனை,

> **படைப்பாளியின் அல்லது படைப்பளிக்குத் தெரிந்த மனிதர்கள் மற்றும் சமூகத்தின் வாழ்க்கைக் கூறுகள் இல்லாமல் நாவல் உருவாகாது எனும் வகையில் மனித வாழ்க்கையுடன் மிக நெருங்கிய நேரடித் தொடர்பு கொண்டதே நாவல் எனலாம். (பெண்ணிய நோக்கில் மேலாண்மை பொன்னுச்சாமியின் புதினங்கள் ப. 31)**

என்கிறார் புதுவை ஞானகுமாரன்.

**பெண்ணியம்**

பெண்ணியம் என்பது பெண்களை அடிமைதளத்திலிருந்து விடுவித்து சுதந்திரமாய் செயல்பட வைப்பது. பெண் என்பவள் எவர்க்கும் எதற்க்கும் சலைத்தவள் அல்ல என்பதை எடுத்துரைப்பது.

> **பெண்ணியம் என்பதற்கு அல்லது பெண்விடுதலை என்பதற்கு என்னைப் பொறுத்தவரையில் என்ன விளக்கம் என்றால் ஒரு பெண் சுயமாகச் சிந்திக்கவும் சுயமாக வாழ்க்கையைத் தீர்மாணித்துக் கொள்ளவும் எந்தச் சார்புமின்றி இயங்கவுமான தகுதியை அடைவதுதான். (பெண்ணிய நோக்கில் பிரபஞ்சன் புதினங்கள், ப. 131)**

இன்றைய நிலையில் கூட நாம் இந்த இலக்கை எட்டவில்லை என்றுதான் சொல்ல வேண்டியுள்ளது. அதுமட்டுமன்றி பெண்ணியம் என்பதற்கு,

> **பெண்ணியம் அனைத்து வகைப் பெண்களுக்கும் உரிமை வேண்டுவது. பெண்கள் தாம் மேற்கொள்ளும் அனைத்துவகை வாழ்க்கை**

 **ISBN Number: 978-81-992374-8-3**

> **முறைகளிலும், பணிகள் அனைத்திலும் சம உரிமை உடையவர்களாக இருப்பதை வலியுறுத்துவது. பெண்களின் உரிமையைப் பறித்து அவர்களைக் கட்டுப்படுத்தும் அனைத்தையும் நீக்குதலை வேண்டுகிறது. (பா. சிவசங்கர், ப. 1173)**

என்கிறார் பா.சிவசங்கர். இது இன்றளவும் முழுமையாக பெண்களுக்குக் கிடைக்கவில்லை என்பதே எதார்த்தமான உண்மை.

தினமும் செய்தித்தாள்களிலும் தொலைக் காட்சிகளிலும் வெளிவரும் பெண்களுக்கு எதிரான பாலியல் சீண்டல்கள் வன்கொடுமைகள் வரதட்சணைக் கொடுமைகள் எல்லாம் பார்க்கும்போது பெண் சுதந்திரம் அல்லது பெண்களுக்கானப் பாதுகாப்பு என்ற நிலையில் நாம் இன்னும் தனிகவனம் செலுத்த வேண்டியதாகத்தான் உள்ளது. இதனை,

> **பெண்களும் ஆண்களை போலவே பல சிந்தனையும், உயர்வும், உணர்வும், விருப்பு, வெறுப்பு உடையவர்களாக உடையவர்கள். ( க. சமயேஸ்வரி, ப. 1481)**

தனித்தியங்க நாம் உறுதுணையாக இருக்க வேண்டும் என்பது இதிலிருந்து அறியமுடிகின்றது.

**சமூக நாவல்**

சமூகப் நாவல்களின் வரையறையாக,

> **இருந்த சமுதாயப் பின்னணியில் அமைந்தன, இருக்கின்ற சமுதாயப் பின்னணியில் அமைந்தன இருக்க வேண்டிய (சமுதாயம் எப்படி இருக்க வேண்டும் என்ற) பின்னணியில் அமைந்தன என்று இந்த நாவல் வகைகளுக்குப் பொதுவாக விளக்கம் கூறலாம்.(நாவல் வளம், ப. 68)**

 **ISBN Number: 978-81-992374-8-3**

என்று இரா. தண்டாயுதம் கூறியுள்ளார்.

**நாவலின் வகைகள்**

பொதுவாக நாவலினை குறுநாவல் என்றும் நெடுநாவல் என்றும் இரண்டாகப் பிரிக்கலாம்.

**குறுநாவலும் நெடுநாவலும்**

கதாபாத்திரங்களின் எண்ணிக்கை நாவல் நிகழும் கால அளவு. போன்றவை குறுநாவலா? நெடுநாவலா? எனக் கணிப்பதில்லை. குறுநாவல்கள் கிராமப்புறச் சூழ்நிலையில் எழுதப்படுமாயின் பல கதா பாத்திரங்கள் இருக்கும். கிராமங்களில் ஒரு வீட்டிலேயே பலர் வசிப்பதுடன் வருவோர் செல்வோரின் எண்ணிக்கையும் அதிகம் என்பதால் இவ்வாறு படைப்பர். நாவல் நகர்ப்புறத்துக் கதையாக இருப்பின் குறைந்த கதாப்பாத்திரங்கள் இடம்பெறுவர். ஜெயகாந்தன் நாவல்களில் எவை குறுநாவல் எவை நெடுநாவல் என்று நாம் தடுமாற வேண்டிய அவசியமே இல்லை. ஏனைனில் அவரே தம் நாவல்களின் முன்னுரையில் அப்படைப்புக்குறிக்குள் நெடுநாவலா? குறுநாவலா? என்று கூறிவிடுகிறார்.

**ஜெயகாந்தனும் சமூக நாவலும்**

ஜெயகாந்தனின் நாவல்கள் சில நம்பிக்கைகளைத் தகர்த்தெரியும் ஆற்றல் கொண்டவைகள். அவைகள் மனிதனின் எண்ணங்கள், செயல்கள், விளைவுகள் ஆகியவற்றை விவரிப்பதால் கற்போரின் சிந்தனை ஆற்றலைத் தூண்டுகின்றன.

> **ஜெயகாந்தன் சமுதாய உணர்வுகளைச் சுட்டிக் காட்டுவதிலேயே நாட்டம் கொண்டிருந்தார். புதுமைப்பித்தனுக்குப் பின்னர் சமுதாயத்தின் நலிந்த பகுதிகளைச் சிறுகதைகளாக வடித்தவர்களில் குறிப்பிடத் தகுந்தவராக**

 **ISBN Number: 978-81-992374-8-3**

> **ஜெயகாந்தனை அறிஞர் குறிப்பிடுவர்.(தற்காலத் தமிழ் இலக்கியம், ப. 22)**

ஜெயகாந்தன் சமூகத்தின் மீதான அதீத ஈடுபாடுடன் செயல்பட்டவர். அவரின் புதினங்கள் அனைத்தும் சமூகப் புதினங்களாகவே உள்ளன. இதனை, மனிதரையும் வாழ்வையும் சார்ந்திருப்பதே என் சித்தாந்தம். மனிதரையும் வாழ்வையும் சார்ந்திருப்பதே ஒரு மொழியின் சிறப்பு (ஜெயகாந்தன் சிறுகதைகள், முன்னுரை) என்பது அவரின் கொள்கை.

ஜெயகாந்தனின் நாவல் கருத்துகளுக்குப் பொருந்துவதாய்,

> **ஒரு குறிப்பிட்ட இடத்தில் அமைந்த பொருளாதாராச் சமூக நிலைகளால் தனிமனித நடத்தை மாறும். அம்மாற்றங்களைப் பற்றி அறிவிப்பனவே சமூகப் புதினங்கள்(தமிழில் சமூக நாவல்கள், ப. 22)**

என்னும் கருத்து அமைந்துள்ளது. தம் காணும் சமுதாயத்தைத் தம் நாவல்களில் விவரிக்கிறார். அவை சமூக மாற்றங்களைப் பற்றியும் அவற்றிற்குரிய காரணங்களைப் பற்றியும் அறிவிக்கின்றன. எனவே சமுதாய மாற்றங்களின் தாக்கங்களைச் சுட்டிக் காட்ட அவர் ஒருபோதும் தவறுவதில்லை.

சமூகத்தின் அடித்தள மக்களைக் குறித்தும் அவர்களிடையே நிலவிவரும் கேடுகள் குறித்தும் அதற்கான காரணங்கள் குறித்தும் ஆழ்ந்து சிந்தித்து ஆசிரியர் எழுதுகிறார் நடுத்தர மக்களும் மேல்தட்டு மக்களும் காண இயலாத கண்டும் அதன் காரணங்களை ஆராய விரும்பாத ஏழைமக்களின் குறை நிறைகளைச் சுட்டிக் காட்டுகிறார். இவரைப் பற்றி,

 **ISBN Number: 978-81-992374-8-3**

> **இன்றைய சமூகத்தில் சுரண்டப்படுவோர் பக்கம் நின்று அவர்களுக்குத் துணை போகவும் பழைய பழக்க வழக்கங்களில் பிற்போக்கான வற்றைக் கடுமையாக எதிர்க்கவும் முனைகிறார். (தமிழில் சமூக நாவல்கள், ப. 25)**

என்ற கருத்து இக்கூற்றிற்கு அரணாக விளங்குகின்றது.

ஜெயகாந்தன் தான் நாவல்களில் தான் வாழ்கின்ற, இருக்கின்ற சமுதாயத்தின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி எழுதுகின்றார். அவ்வாறு எழுதுகையில் குடும்ப நிகழ்ச்சிகளிலிருந்து தொடங்கிச் சமுதாயக் கண்ணோடத்துடன் அதனை விவரித்துச் செல்கிறார். சில நேரங்களில் சில மனிதர்கள்? எனும் நாவலில் ஒரு குடும்பத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சி எவ்வாறு சமூகச் சிக்கலாக உருவெடுக்கின்றது என்பதை விரிவாகப் பேசியுள்ளார். இதன்வழி, தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் உள்ள போராட்டமே சமூகப் புதினமாக உருவெடுக்கிறது என்பதை நம்மால் புரிந்துக் கொள்ள முடிகின்றது. இவ்வகை நாவல்கள் சமூகத்தை முற்போக்குப் பாதையில் இட்டுச் செல்லும் கதைகளாக மலர்கின்றன. இதனை,

> **மனிதனுக்கு மனிதன் இருக்கும் நேசம் உளநெகிழ்வு வாழ்க்கையில் மனிதனுக்கு இருக்கும் பற்று ஒருவரின் துயர் போக்க மற்றொரு துயரப்படும் ஜீவன் செய்யும் தியாகம் இன்னபிற அடிப்படை மனித உணர்வுகள் பொதுவாக வளர்ச்சிக்கான ஆதார உண்மைகள். இவை எல்லாம் சேர்ந்தே உலக வளர்ச்சிக்கேற்ப உளவளர்ச்சியும் அறிவுத் தெளிவும் பெறும் முற்போக்குச் சிந்தனையால் ஒரு முற்போக்காளர் உருவாக வழி அமைக்கிறது. (மாலைமயக்கம், முன்னுரை)**

 **ISBN Number: 978-81-992374-8-3**

என்று ஆசிரியரே உரைப்பதிலிருந்து இக்கருத்துப் புலனாகும்.

சமூக நாவல்கள் எழுதுவதில் ஒரு புதிய கோணத்தை ஒரு புதிய பார்வையைத் தோற்றுவித்தவர் ஜெயகாந்தன் எனலாம். சமூகச் சீர்திருத்தங்களை விழைந்து அவற்றின் மேடு பள்ளங்களைச் சுட்டிக்காட்டுகிறார். தெளிவாக நடையைப் பின்பற்றிக் கதைப் பின்னலுக்கேற்பக் கதாப்பாத்திரங்களைப் படைத்துள்ளார். மேலும், அவற்றை உயிர்த்துடிப்பு உடையவையாகப் காட்சிப்படுத்தியும் உள்ளார். பல்வேறு வகையான பேச்சு நடையும் எண்ணமும் உடைய கதாபாத்திரங்களின் வாயிலாக கதை வளர்ச்சியில் அவர்கள் இணைந்து இழையுமாறு உருவாக்கியும் உள்ளார்.

> **கதைப்பின்னலில் தொய்வு விழாதபடி இறுக்கமும் நிலவச்செய்து படைக்கும் நாவல் மிகச்சிறந்த இலக்கியந்தான் (தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும், பல்கலைக் கழகச் சொற்பொழிவுகள், ப. 128)**

என்பதற்கேற்ப புதியபார்வையில் கதாப்பாத்திரங்களைப் படைத்துள்ளார் ஜெயகாந்தன்.

**சமூகச் சிக்கல்கள்**

ஆண்களைப் பொதுவாகவே இச்சமூகம் பெண்களைக் காட்டிலும் அனைத்திலும் உயர்ந்தவன் என்றும் பெண்கள் அவனுடைய கட்டளைகள் ஏற்று நடப்பதே நன்னடத்தை என்றும் ஒருவகையான பிம்பத்தை ஏற்படுத்தி வைத்துள்ளது. இதனை, **பெண்ணினம் ஆணினத்திலும் தாழ்ந்தவர்கள் என்ற தவறான கருத்தை ஆண்கள் தம் ஆதிக்கத்தால் எல்லோர் சிந்தனையிலும் நிலைநாட்டி விட்டனர். ( பெண்ணடிமை**


**ISBN Number: 978-81-992374-8-3**

**தீர, ப. 6)** என்பதிலிருந்து அறியலாம். மேலும், ஆண்கள் பெண்களைத் தம் காம இச்சைக்கு உள்ளாக்குது இயற்கை என்பதை,

> **சந்தர்ப்பம் சாதகமாக இருந்தாலும் அவர்கள் தம் சுயக்கட்டுப்பாட்டை இழந்தாலும் அவர்கள் கட்டுப்படுத்தப் படாவிட்டாலும் பெண்களின் கவர்ச்சியைப் பருகுவதில் ஆண்கள் தீவிரமானவர்கள் என்பது இயற்கை நியதி. (பெண்களின் கவனத்திற்கு, ப. 15)**

என்கின்றனர். ஆனால், இதனைப் பெண்கள் செய்தால் அவளுக்குப் பெயர் வேறாகவே இச்சமூகம் வைத்துள்ளது.

பாலியல் சிக்கலுக்குள்ளாகிய கங்கா தன் வாழ்க்கையை இழந்த நிலையை விளக்கும் ஆசிரியர். **அந்த மாதிரியான சம்சார வாழ்க்கை சாஸ்திரப்படி நம் தர்மப்படி உனக்குக் கிடையாது (சில நேரங்களில் சில மனிதர்கள், ப. 63)** என்று கூறி அவளுடைய மாமாவை திருமணம் செய்துக் கொள்வதிலிருந்து தடுத்து, நீ ஒருவனுக்கு ஆசை நாயகியாக வாழலாமே தவிர மனைவியாக வாழ இயலாது என்று கூறி இச்சமூகத்தின் இழிநிலையை எடுத்துரைக்கிறார்.

**பாத்திரப்படைப்பு**

ஒரு நாவலின் இதயமாகத் திகழ்வது அதற்கானப் பாத்திரப்படைப்பே ஆகும். சங்க காலத்தில் ஒப்பற்ற தலைவன் தலைவியை கதைத் தலைவர்களாக படைக்கும் நடைமுறை இக்காலத்தில் சற்றே மாறத் தலைப்பட்டது.

> **பாத்திரப்படைப்பு என்பது ஒரு பெயர் சூட்டி விடுவதோ, அங்க வருணனை நடத்தி விடுவதோ அல்ல மனம் அறிவு சிந்தனை, குண இயல்பு சூழ்நிலைகளின் போது வெளிப்படும் உணர்ச்சிகள் இவற்றையெல்லாம் கூர்ந்து**

 **ISBN Number: 978-81-992374-8-3**

> **அறிந்து அனுபவமாக வெளிப்படுவதைத் தீட்டுவதாகும். (சில நேரங்களில் சில மனிதர்கள், ப. 6)**

என்று கூறி அதற்கேற்றவாது தம் நாவல்களின் பாத்திரங்களைப் படைத்தும் காட்டியுள்ளார். மேலும்,

> **கதை மாந்தர் உயிரோட்டத்துடன் படைத்துக் காட்டப்படும் போது அப்பாத்திராப்கள் நெடுங்கிய உறவுடையன போல அமைவதுண்டு முரண்பட்ட பகைவர்கள் போல உணர வைப்பதுண்டு; என்றோ சந்தித்த மாந்தரைப் பலநாள் கழித்து சந்திப்பது போல மனநிலையை உருவாக்குவதுண்டு. உள்ளத்திரையில் தங்கள் நிலைவுகளை அழியாமல் நிலை நிறுத்துவதுண்டு. இவ்வாறு தம் வாசகர்கள் உணர்ந்துள்ளனர் என்பதைக் கடிதங்கள் மூலம் தாம் அறிந்ததாக ஜெயகாந்தன் கூறுவது முற்றிலும் பொருந்துவதாகும். (சில நேரங்களில் சில மனிதர்கள், ப. 7)**

கங்கா அறிவோடு சிந்தித்து தம் வாழ்க்கையை நடத்துகிறாள் அவளை அடையும் நோக்கத்தோடு அணுகும் வெங்கு மாமாவிடம் எச்சரிக்கையோடு நடந்துக் கொள்கிறாள். இவைகளைல்லாம் அப்பாத்திரத்தினைப் அறிவுநிலைப் பாத்திரமாக உயர்த்துகின்றன. அவள் சூழலைப் பார்க்கும் போது ஊராரால் அவமதிக்கப்பட்டு வெங்குமாமவிடம் அடைக்கலம் புகுபவள் அவனின் நடத்தைகளைக் கண்டு தவிப்பதும் பிள் கல்விக் கற்று வேலைக்குச் சென்று தாயுடன் வாழ்ந்து தனிமையில் இருப்பதும் அவளை சிந்திக்க வைக்கின்றன. அவள் அவ்வாறு தனிமையில் இருப்பதும் கூட ஒருவகையில்

 **ISBN Number: 978-81-992374-8-3**

அவளை இச்சமூகத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக வேண்டியேயாகும். இதனை,

> **என் மனசே எனக்குச் சொல்றது யாரையும் சுலபமா நம்பிடாதே. உன்ன முடிஞ்ச வரைக்கும் மறைச்சு வைச்சுக்கோ இல்லேன்னா உன் அம்மா, அண்ணா, மாமா எல்லோரையும் போல் உலகமே உன்னை இளப்பமா நெனைக்கும் (சில நேரங்களில் சில மனிதர்கள் ப. 107)**

எனும் நினைவோட்டத்தின் வழி தனிமையில் இருக்கும் பெண்களின் நிலையை ஆசிரியர் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார். இவ்வாறான சமூகச் சிக்கல்களுக்கு ஆளாகும் கங்கா சமூகத்தின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்படாதவளாகப் படைக்கப்பட்டுள்ளாள். கங்காவின் இயல்பிலும் பல்வேறு முரண்பாடுகளை ஆசிரியர் படைத்துக் காட்டியுள்ளார். முதற்பகுதியில் அணிகலன்களில் ஈடுபாடற்று இருந்தவள் பிற்பகுதில் பிரபுவைச் சந்தித்த பின் அணிகலன்களில் நாட்டம் கொள்கிறாள். அதேபோல் ஆரம்பத்தில் திருமணத்தில் நாட்டமின்றி இருந்தவள் பின் ஒரு பெண் ஆண் துணையின்றி வாழ இயலாது என்பதை உணர்கிறாள். பெண் ஆணோடு வாழ்ந்தால் தான் சமூகத்தில் மதிப்பு கிடைக்கிறது என்பதையும் உணர்கிறாள்.

கங்கா பன்னிரண்டு வருடத்திற்கு முன்பே தனக்கு கந்தர்வத் திருமணம் நடைபெற்றதாகப் பிரபுவிடம் கூறுவதோடு தான் திருமணம் செய்துக் கொள்ள தகுதியற்றவள் என்று கருதுகிறாள். மேலும், வெங்குமாமா கூறியது போல் ஆசை நாயகியாக இருப்பதற்கு மட்டுமே தனக்கு தகுதி இருப்பதாகவும் கருதி அவனுக்கே(பிரபு) ஆசை நாயகியாக இருக்க நினைக்கிறாள். அவன் மீது காதல் கொண்டுள்ளதை உணரும் கங்காவிற்கு அவனே

 **ISBN Number: 978-81-992374-8-3**

சிறந்த துணையாகவும் காட்சியளிக்கிறான். இவ்வாறான மாறுபட்ட குணங்களுக்கான காரணத்தை எடுத்துரைக்க ஆசிரியர். **காலத்தின் அலைகளால் எற்றுண்ட மோதி மூழ்கிய, போக்கில் மிதந்த எதிர்த்து ஒய்ந்த ஆத்மாவின் கதை இது (சில நேரங்களில் சில மனிதர்கள், ப. 15)** என்கிறார். சமூகத்தால் அவலத்திற்கு உள்ளாக்கப்பட்ட கங்கா முதலில் வெட்கி தலைகுனிந்திருந்தவள். பின் அச் சமூகத்தை எதிர்த்து வாழ்வதற்கு துணிகிறாள். கங்கா தன் தாய் கனகத்திடம் அக்னிப் பிரவேசக் கதையைக் கொடுத்துப் படிக்கச் செய்த போது தான் நடந்துக் கொண்டதை நினைத்து வருந்துகிறாள் கனகம். **எவனோ எங்கேயோ ரகசியமாகக் கூட்டிண்டு போய் அவளைக் கெடுத்தான் அதைச் சந்தி சிரிக்க வச்சு அவள் வாழ்க்கையைலே நான் கெடுத்தேன் (சில நேரங்களில் சில மனிதர்கள், ப. 41**) என்கிறாள் அவருடைய வாழ்க்கை தன்னால் தான் பாழானது என்ற மன உறுத்தலும் கனகத்திற்கு ஏற்பட்டது. இதனால் காலமெல்லாம் தீராப் பழியும், சமூக வெறுப்பும் ஏற்பட்டதை நினைத்து வருந்தினாள். இதனால் கங்காவின் இயல்பும் குண நலன்களும் வெளிப்படுகின்றன.

**முடிவுரை**

சமூக நாவல்களைப் படைப்பது என்பது தனிக்கலை. அதில் தனக்கெனத் தனி முத்திரை பதித்தவர் ஜெயகாந்தன். அந்த வகையில் சில நேரங்களில் சில மனிதர்கள் எனும் நாவலில் கங்கா எனும் கதாபாத்திரத்தின் வழி தன் கற்பை இழந்த பெண் தன் தாயினாலேயே அவமானப்படுத்தப்படுகிறாள். வெங்குமாமா அவளை அடைய பல வழியில் முயற்சி செய்கிறார். நீ திருமணத்திற்கு உரியவள் அல்ல. ஆசைநாயகியாக வாழ்வதற்குத்தான் உரியவள் எனும்

 **ISBN Number: 978-81-992374-8-3**

போது இச்சமூகம் பெண்களைக் காமப்பொருளாக மட்டுமே பார்க்கிறதே ஒழிய அவளின் மனதை பார்க்க மறுக்கிறது என்பதை உணர வைத்துள்ளார்.

**துணைநூற்பட்டியல்**

[1] கணேசலிங்கம். செ, பெண்ணடிமை தீர, பாரி நிலையம், சென்னை, 1989.

[2] கனகவல்லி, வை. *பெண்ணிய நோக்கில் பிரபஞ்சன் புதினங்கள்.* இளமுனைவர்ப்பட்ட ஆய்வேடு, தமிழ்த்துறை, காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையம், புதுவை, 1995.

[3] சமயேஸ்வரி, க. "எஸ்.ராமகிருஷ்ணனின் துயில் புதினத்தில் பெண்ணிய சிந்தனைகள்." *International Journal of Novel Research and Development*, Vol.7, Iss.8, August 2022, ISSN: 24564184.

[4] சிவசங்கர், பா. "பெண்ணுரிமை மீட்டலில் வாஸந்தியின் புதினங்கள்." *புதிய அவையம்*, Vol.7, Iss.02, June 2023, ISSN: 2456-821X.

[5] தண்டாயுதம், இரா. நாவல் வளம், தமிழ்ப்புத்தகாலயம், 1977.

[6] புதுவை ஞானகுமாரன். *பெண்ணிய நோக்கில் மேலாண்மை பொன்னுச்சாமியின் புதினங்கள்.* சிந்தனை பதிப்பகம், புதுச்சேரி, 2007.

[7] ஜெயகாந்தன் சில நேரங்களில் சில மனிதர்கள் மதுரை மீனாட்சி புத்தக நிலையம், 1986.

[8] ஜெயகாந்தன், ஜெயகாந்தன் சிறுகதைகள், அனைத்திந்திய நூல்வரிசை நேஷனல் புக் டிரஸ்ட் ஆப் இந்தியா, 1973

[9] ….பெண்களின் கவனத்திற்கு, சாந்தம் பிரச்சார அறக்கட்டளை, வாணியம்பாடி, 2005.

 **ISBN Number: 978-81-992374-8-3**

[10] ஜெயகாந்தன், மாலைமயக்கம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1985.

[11] தண்டாயுதம், இரா. தற்காலத் தமிழ் இலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம், 1979.

[12] வீராசாமி, த.வே. தமிழில் சமூக நாவல்கள், தமிழ்ப்புத்தகாலயம், 1979,

[13] கி.வா. ஜகந்நாதன், தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும், பல்கலைக் கழக சொற்பொழிவுகள், தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், 1977.

 **ISBN Number: 978-81-992374-8-3**

# 5

# மின்சாரப்பூவில் காணலாகும் சமுதாய விழுமியங்கள்

**முனைவர் பி. ஸ்ரீதேவி,** தமிழ்த்துறைத்தலைவர் (சுயநிதி),
ஸ்ரீ எஸ். இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர்

## முன்னுரை

கரிசல் மண்ணின் வெம்மையும், இருளும் அம்மக்களின் வரழ்வில் ஏற்படுத்திய தாக்கமே அவரின் படைப்புகள். சாதாரண எளிய மக்களின் அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளே கதைக்கருவாக அமைந்துள்ளது. அவர்களின் உணர்வுகள், கோபதாபம், மகிழ்ச்சி, துக்கம் போன்றவற்றை பிரதிப்பதாகவே மேலாண்மை பொன்னுச்சாமியின் எழுத்து அமைந்தது. தமிழ் எழுத்துலகில் தனக்கென தனியிடம் பதித்தவர். பிரம்மாண்டமும் புனைவும் இல்லாத யதார்த்த படைப்புகள் இவரது படைப்புகள். எளிய கிராமப்புற மக்களின் வாழ்க்கைப்பாடுகளை, வாழ்வாதாரப் போராட்டங்களைத் தன்னுடைய படைப்புகளில் வெளிப்படுத்துகிற கரிசல் மண் சார்ந்த படைப்பாளுமையாக அடையாளப்படுத்தப்படகிறார்.

மேலாண்மறைநாடு என்னும் கரிசல் மண்ணில் பிறந்து, ஓரளவு பள்ளிக் கல்வி; பெற்று, வாசிப்புத் திறனால் எழுத்தாளராக உருவானவர். அவர் எழுதிய 36 நூல்களில் 6 நாவல்கள், 22 நிறுகதைகள், 1 கட்டுரைத் தொகுப்பு ஆகும். இவரின் மின்சாரப்பூ என்னும்

 **ISBN Number: 978-81-992374-8-3**

சிறுகதைத் தொகுப்பு 2007 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாதமி விருதைப் பெற்றது. மின்சாரப்பூ சிறுகதைத் தொகுப்பில் இடம்பெறும் கதைகளில் காணலாகும் சமுதாய விழுமியங்கள் குறித்த செய்திகளை ஆராய்வதாய் இக்கட்டுரை அமைகிறது.

மானாவாரிப் பூ, பூக்காத மாலை, மின்சாரப்பூ போன்றன இவரின் புகழ்பெற்ற சிறுகதைத் தொகுப்புகள் ஆகும். மின்சாரப்பூ தொகுப்பில் உள்ள கதைகளைக் குறித்துப் படைப்பாளர் அவர்கள் கூறுகையில், “மின்சாரப்பூ ஒரு சற்றே பெரிய சிறுகத்த. 'அன்பெழுத்து' வில் வருகிற சொர்ணச்சாமி, மேலாண்மை பொன்னுச்சாமிதான். நான் சிகரெட் புகைக்கிற பழக்கத்தை விட்ட அனுபவம் கூட ஒரு சிறுகதைக்குரிய பாடு பொருளாகியிருக்கிறது. 'நீரில்லாமீன்' கதை தனித்துவமானது. சில்லறைக் கடைக்காரனாக இருந்து வாழ்கிற என்னால்தான், இந்த உள்ளடக்கத்தைக் கையாள முடியும். இந்த மாதிரியான அனுபவங்கள், மத்திய தர வர்க்கத்துப் படிப்பாளியாக இருந்து படைப்பாளியானவர்களுக்கு கிடைக்கிற வாய்ப்பே இல்லை (மின்சாரப்பூ) என்கிறார்.

கூட்டுப் பிணைப்பாக மக்கள் வாழும் சமுதாயத்தில் மனிதர்களின் விழுமியங்கள் அச்சமுதாயத்தினாலேயே வகுக்கப்படுகிறது. மனிதர்கள் எப்படிப்பட்ட வாழ்வினை வாழ்ந்தார்கள் என்பதைப் பதிவு செய்யும் இதே சமுதாயம், எப்படிப்பட்ட வாழவினை வாழக் கூடாது என்ற படிப்பினையையும் கற்பித்துள்ளது. அன்றாட வாழ்வாதாரத்திற்கே போராடிக் கொண்டிருக்கும் ஏழை மக்களின் வாழ்வில், போதிய வருவாய் இல்லையென்ற நிலையில் பணமே அவர்களின் வேதனைக்குத் தீர்வாக இருந்த போதிலும், பணத்திற்காய்

 **ISBN Number: 978-81-992374-8-3**

தன் மானத்தை இழக்காத நிலையும், பெண்கள் கற்பினை மூச்சாகக் கருதி வாழ்ந்த நிலையும் தெள்ளத்தெளிவாகப் பதிவு செய்யப் பட்டுள்ளது. உழைப்பில் உண்மையினையும், மண்ணைத் தன் தெய்வமாகவும், மனிதநேயத்தைத் தன் மூலதனமாகவும் கொண்டு வாழ்ந்த மக்களின் கதைகள் இவை.

**கிராமத்து மக்களின் வாழ்வியல் யதார்த்தம்**

கிராமப்புற மக்களின் யதார்த்தமான வாழ்க்கை கதைகள் முழுதும் படம் பிடித்துக் காட்டப் பட்டுள்ளது. நடுத்தர மக்களும், ஏழை மக்களுமே இவரின் கதைமாந்தர்கள். அன்றாட வாழ்வைக் கழிக்கவே அல்லல்படும் மனிதவர்க்கம். விளைச்சல் இல்லா பூமி, வறட்சி, காடுகளுக்குள் பச்சை மரங்கள் இல்லை. நீரில்லா மீனைப் பிடிப்பதைப் போல, வறண்ட நிலத்தில் வித்தியதெல்லாம் வீணாய்ப் போக நிலம் வைத்திருப்பவனும் நிலத்தால் பிரயோசனமின்றி கடனாளியாகவே வயக்காட்டில் வேலை செய்வதொன்றையே தொழிலாகத் தெரிந்து வைத்திருந்த ஏழைத் தொழிலாளிகள் சாதிக்கேற்ற தொழில் செய்தாலும் அங்கே மேலினத்தார்க்கு மரியாதை தருவதென்பதே, அவர்களுக்கான முக்கியமான அடையாளமாக இருந்துள்ளது.

**பெண்மையின் முகங்கள்**

இவரது படைப்புகளில் வரும் பெண்கள் பெரிதாக படிப்பறிவு இல்லாதர்கள். தங்களுக்கென வகுத்துக் கொண்ட வரையறை உடைய வாழ்க்கையை வாழக் கற்றுக் கொண்டவர்கள். அப்படிப்பட்ட பெண்களையே இவரது படைப்புகளில்நாம் காண முடிகிறது. கணவனை இழந்த பெண்ணின் நினைவுகளில் ஆழப் பதிந்து இருந்த கணவனின் நினைவுகள் இரவில் அவளை தூண்டினாலும்

 **ISBN Number: 978-81-992374-8-3**

வெளியில் சொல்ல முடியாத, பறிகொடுத்த வாழ்கையின் ரணத்தை அவள் மட்டுமே தனித்து அனுபவிக்கும் கொடுமையை மனதிற்குள்ளேயே பதித்துக் கொண்ட விஜயம். அவளின் ஒரே ஆதரவாக இருந்த மகள் சரசு பள்ளி குழந்தையாக இருக்கும் பொழுது வலிப்பு நோய் வந்தது கணவனின் நினைவாயோ அவன் ரத்தத்தில் பிம்பம் ஆயும் இருந்தா ஒரே மகளின் அந்த நோய் விஜயத்தின் ரணத்திற்கு மேலும் நெருப்பைக் கொட்டியதாய் உணர்ந்தாள்.

தான் வேலை செய்து தான் தன் பெண் குழந்தையும் காப்பாற்ற வேண்டும் என்ற நிலையில் மகளின் வெட்டு வியாதிக்கு பெரிய அளவில் வைத்தியம் பார்ப்பதற்கு அவளால் முடியவில்லை. ஏழை பட்டவர்களின் ஒரே பெரிய மருத்துவர் அவர்களின் குலதெய்வமே தெய்வத்திற்கு நேற்று கடன் போட்டு விடுவதையே பெருந்துணையாக கொண்டார்கள் எளிமையான வைத்தியம் எங்கும் கிடைக்காதா என்று ஏங்கி இருந்த நிலையில் கிராமத்து மக்களுக்கு இயல்பான பண்பு ஒன்று உண்டு அவர்கள் பெற்ற நல்லவற்றை அடுத்தவரும் பெற வேண்டும் பெற்று பயனோட வேண்டும் என்றே நினைப்பார்கள் மீனாட்சி என்ற பக்கத்து வீட்டு பெண் கொடுத்த யோசனையின்படி ஹோமியோபதி வைத்தியத்திற்கு மகளை அழைத்துச் சென்று வைத்தியம் பார்த்தால் மாமன் முறையில் இருக்கும் உறவுக்காரன் விஜயத்தை உடற்பசி காய் அழைத்து குழந்தை வைத்தியத்திற்கு பணம் கொடுப்பதாகக் கூறியவனை அவனை அடித்து வெளியேற்றினாள் விஜயம். ஒழுக்கம் உள்ள இருந்து கொழுந்து விட்டு எரிகிற பண்பு என்று, அப்பெண்ணின் வாயிலாக உலகிற்கு பறைசாற்றியுள்ளார்.

 **ISBN Number: 978-81-992374-8-3**

பெண்களுக்குள் மனதில் ஆழப் பதிந்து இருக்கும் அன்பு. ஒரு ஆளுமையை, ஒரு குடும்பத்தை ஆளும். நாட்டையும், பெரும் தொழில் நிறுவனங்களை ஆளும் திறமும் அவர்களுக்குள் பொதிந்து கிடக்கிறது. ஆனால் அவையெல்லாம் வெளியுலகில் தன்னை பரிணமித்து கொண்டிருக்கும் பெண்களுக்கு அது சாத்தியம்.

எழுத்தாளர் மேலாண்மை பொன்னுச்சாமி அவருடைய வாழ்க்கை நிகழ்வையே கதையாக்கி இருந்தாலும், பெண்ணின் ஆளுமையை அசாத்தியமாக சொல்லிவிட்டு போயிருக்கிறார். சிகரெட் இல்லாமல் எழுத முடியாது என்று ஆரம்ப நாட்களில் இருந்தே மனைவியை சமாளித்து வந்த கணவருக்கு, அந்த சிகரெட் தான் எமன் என்று மருத்துவர் கூறியதும், தன் ஆளுமையை முழுமையாய் பாய்ச்சும் பெண். அன்பு என்னும் ஆயுதத்தால், தன் உயிரை பெரிதாக நினைத்த கணவனின் அரவணைப்பாய் அனுதினமும் மாத்திரைகள் போடப்பட்டதா, என மனைவியின் மேல் அக்கறை காட்டிய கணவனுக்கு இனி அதை குப்பையில் போடுவேன் என்கிற பதில் கிடைத்தது. சிகரெட்டை நிறுத்தினால் எழுத்தில்லை என்றால், மாத்திரைகள் எனக்கும் தேவையில்லை என்ற எதிர்மறையான வார்த்தைகளை அதுவரையிலும் கேட்டிராத அந்தப் படைப்பாளுமையை தன் அன்பால் ஆண்ட மனைவியின் அன்பினை பதிப்பிக்க தெரிந்ததே அதுவே அவரின் படைப்புகளுக்கு அன்பழுத்தாய் உருவெடுக்க வைத்துள்ளது.

**சம்சாரிகளின் பெரும்பாடு**

விவசாயம் ஒன்றை மட்டுமே பிழைப்பாகத் தெரிந்து வைத்திருந்த மனிதர்கள் சம்சாரிகள். அவர்களின் வாழ்வில் நிலமும், விதையும் விலைச்சலையும் தவிர வேறு

 **ISBN Number: 978-81-992374-8-3**

எதையும் அறியாதவர்கள். ஏமாற்றிப் பிழைக்கத் தெரியாதவர்கள். அவர்களின் வாழ்க்கைப் பக்கங்களை புரட்டிக் காட்டி இருக்கிறார் நம் படைப்பாளர்.

நிலம் வைத்திருப்பவன் நிலக்கிழான்,ஆநிரைகள் வைத்திருப்பவன் அதை வைத்தே சம்பாதிக்கலாம் என்ற நிலை எல்லாம் மழை ஒன்றின் முன் மாறிவிடுகிறது. நிலமும், ஆநிரைகளும் வைத்திருந்தாலும் வானம் பொய்த்து விட்டால் கடனாளியாகவே மாறிவிடும் நிலை கரிசல் மண் சம்சாரிகளின் அன்றாடப் பாடாயிருந்தது. நிலத்திற்கும் வீட்டிற்கும் செலவழிக்க வட்டிக்கு வாங்குவதையே, அம்மக்கள் வழக்கமாய் வைத்திருந்தார்கள். வட்டியும் முதலுமாய் அவன் கேட்ட நாளுக்குள் பணம் திரும்ப வரவில்லை என்றால் ஊரே கூடும் அளவிற்கு அவமானப்படுத்தப் படுவார்கள். இந்தக் கொடுமையிலிருந்து தப்பிக்க இடைத்தரகன் வேலையை பார்க்க வேண்டிய நிலையில் சங்கையா இருந்தான்.

ஆட்டுச் சந்தையில் தன் நெஞ்சு வலிக்க கத்தி பேரம் பேசி முதலில்லாமல் 400 ரூபாய் சம்பாதித்தான். அதையே, "விதையில்லாமல், நிலம் இல்லாமல் வந்த மீன். வெறும் கை போட்ட முழம், மந்திரத்தில் பழுத்த மரங்கள்" (மின்சாரப் பூ, ப. 26) என்கிறார். ஒரு சம்சாரியிடம் இருந்து வாங்கி லாபம் வைத்து விட்டு விற்றுவிட்டோமே என்ற எண்ணம் அவனின் குற்ற உணர்வை மேலும் மேலும் தூண்டினாலும், சீட்டுக்காரன் நெருக்கடி அவன் மனதின் குற்ற உணர்வை தழும்பாக்கிச் செல்கிறது.

**கறுப்பு மனிதர்களின் மன தைரியம்**

மனிதர்கள் கறுப்பு மனிதர்கள் தான். வெயிலை தன் தோளுக்கு இதமாக வாங்கிக் கொண்டு கறுப்பில் ஊறியவர்கள். ஆனால் மன தைரியத்திலும், தன்மானத்திலும் எந்தவித குறைவும் இல்லாதவர்கள்

 ISBN Number: 978-81-992374-8-3

அவர்கள். அப்படிப்பட்ட மனிதர்களையே காட்சிப்படுத்தியுள்ளார் நம் படைப்பாளர்.

வயல்பாத்தி கட்டுவது என்றால் அந்த ஊரில் எல்லோருக்கும் தெரிந்த நல்ல வேலைக்காரன் கரையாண்டி. வானம் பெய்ய மறந்த காலங்களில் நல்ல வேலைக்காரனுக்குக் கூட, நிலத்தில் எங்கும் வேலை இருப்பதில்லை. ஆனாலும் கிணற்றில் நீர் இருக்கும் ஒரு சிலராலேயே நிலத்தில் வேலை செய்ய ஆட்களை விட முடிகிறது. ரெங்கப்பநாயக்கரின் நிலத்திற்குப் பாத்திகட்ட ஆள் தேடி வந்து கரையாண்டியை கூலி பேசி முடித்தார். கரையாண்டியின் மனைவிக்குக் கடையில் கடனாகக் கூட பொருள் கிடைக்கவில்லை. பழைய பாக்கி கொடுக்காமல் கடைக்காரன் பொருள் கொடுக்க எரிச்சல் படும் நிலையை கணவனுக்குக் கூறி பணத்திற்கு தயார் செய்ய சொன்ன அந்த பரிகாச மிரட்டல் தொனியே அவனை அதிகம் வாட்டியது. தன் மனைவி பேச்சியை திருப்திபடுத்த ஒரு வேலை வந்துவிட்டது என்று பேசி முடித்த நிலையில், புஞ்சை அவனுடைய பரம்பரையாக தாத்தாவும், தந்தையும் விட்டுப் போன அவர்களின் புஞ்சை, அவன் விற்று விட்ட அதே புஞ்சை தான் என்று தெரிந்ததும், ஏழ்மையையும், பசியையும் தாண்டி அவனது தன்மானம் திமிறிக் கொண்டு நின்றது.

அன்றாடங் காய்ச்சிகளின் அவலங்கள் யாவும் பெட்டிக் கடைக்காரனுக்கும் தெரியும், வட்டிக் கடைக்காரனுக்கும் தெரியும். இருந்தும் அவர்கள் இறக்கப் படுவதில்லை. காலம் அவர்களுக்கும் கணக்கு வைத்திருக்கிறது. தன் நிலத்திற்கே தான் உழைப்பாளியாக செல்ல வேண்டுமே என்கிற அவமான உணர்வு அவனை வறுமை நிலையிலும் வருவாயைப் பெற தூண்டவில்லை. செந்தூரனின் பேச்சும்

 ISBN Number: 978-81-992374-8-3

யோசனையும், கரையாண்டியின் மனதை உழுது எடுத்தது.

**"பரம்பரை புஞ்சை போயிடுச்சுன்னு முக்காடு போட்டுக்கிட்டு அழுதா சரியாயிருமா? அணிலு, அனுமாரு, குகன், விபீசஷணன்னு வந்தவுகளை எல்லாம் கூட்டிகிட்டு சண்ட போட்டாத்தான், பறிபோனது திரும்பக் கெடைக்கும். தெரியுமா, மச்சான்?" (மின்சாரப்பூ, ப. 41)** படிக்கவில்லையானாலும், வாசிப்புப் பழக்கம் பெரிதும் இல்லாதவனாய் இருந்தாலும் செந்தூரனின் அனுபவ விவரம் அந்த இரு கறுப்பு மனிதர்களையும் மன தைரியத்துடன் தொழில் செய்ய அழைத்துச் சென்றது.

அடிமை சாதி என்று ஒதுக்கி வைத்த கறுப்பு மனிதர்களின் மன தைரியத்தை ஆட்டிப்படைக்கும் மேலதிகார வர்க்கத்தின் கொடுமைகளை இயல்பாக வடித்திருக்கிறார். அரண்மனை வீடு என்றால் அடிமை சாதியினருக்கு உள்ளே செல்ல அனுமதி இல்லை. ஆனால் அவர்களின் வியர்வை பட்ட விளைச்சல் மட்டும் அரண்மனை அடுக்களை வரை செல்லும். விவசாய பூமியிலும் அவர்களின் பாதம் பட அனுமதி இல்லை என்று சொல்லியிருந்தால் அரண்மனையே இருந்திருக்காது. அத்தனையும் விவசாயக் குடும்பங்களாகவே இருந்திருக்கும். ராமைய்யா மகன் பாலையன் கொஞ்சம் முதிர்ந்த இளைஞன். அரண்மனை வாசிகளிடம் அணுகும் முறை அறிந்தவன். மற்ற இளைஞர்களுக்கு அந்த அனுபவம் இல்லை. இருந்தாலும் நம் உழைப்பை வீடு வரை வேண்டும் என்கிறவர்கள், நம்மை வீட்டு வெளியில் ஏன் நிறுத்த வேண்டும் என்ற முற்போக்கு எண்ணத்தில் அரண்மனை முன்பு கூட நிமிர்ந்து நிற்க துணிந்தவர்கள்.

 **ISBN Number: 978-81-992374-8-3**

கொளுஞ்சியை வேரோடு பிடுங்குவது என்பது 100 கிலோ எடைப்பிரிவில் முதலாவதாக பளுதூக்குபவனுக்கும் அரிதான ஒன்று. அப்படிப்பட்ட கொளுஞ்சியை கொழைக்கட்டுகளாக 66 கட்டுகளை கட்டி வந்திருக்கும் வீரசிங்கங்களே ஆனாலும், அவர்கள் கீழத்தெரு ஆட்கள் என்ற நிராகரிப்பு தான் அந்த இளைஞர்களின் கோபத்திற்குக் காரணம். ஆண்டான் அடிமைத்தனத்தை இவர்கள் மட்டும் நினைத்தால் அறுத்து விட முடியாது என்ற பாவனையில் இவர்களின் கொளுஞ்சிக் கொலைகளை வாங்குவதாக வாக்கு கொடுத்துப் பின் அதை உதாசீனப்படுத்தி, அவர்களின் வயிற்றில் அடிக்க நினைத்த ஆதிக்கமேலாண்மையின் உதாசீன எண்ணங்களால் புண்பட்ட உழைப்பு, திமிர முடியாமல் பல்லைக் கடித்து அழுகிறது.

கணக்குப் பிள்ளையின் கணக்கு, முதலாளிகளுக்கு நிகராக தனக்கும் மரியாதை தராத கீழத்தெரு ஆட்களின் உழைப்பை நிர்மூலமாக்கவே எண்ணியது. முதலாளியுடன் எந்தத் தொடர்பும் உழைப்பவனுக்கு இருக்கக் கூடாது என்பதிலும், அக்கறை காட்டுகிறது. பாலையன் பட்ட அவமானத்திற்கு அவனது தந்தை ராமையன் கொடுக்கும் பதிலே என்றென்றும் நிலைத்த உண்மையாய் அவன் அழுகையையும், மனத்தீயையும் அணைத்தது.

**காட்டை நெலமாக்குனதும், நெலத்தை பொன்னாக்குனதும் நம்ம ஒழைப்பு தாண்டா, நம்ம வேர்வை சூரியனைப் போல என்னென்னைக்கும் இருக்கும். எல்லாத்தையும் உண்டாக்கும் டா. பண்ணையாரு இல்லாம நம்ம உழைப்பு வாழ்ந்துரும். நம்ம ஒழைப்பு இல்லாம பண்ணையாரு வாழ்ந்திட முடியாது டா..... தை மாசம் வரட்டும்டா, நெல்**

 **ISBN Number: 978-81-992374-8-3**

**கருதறுப்புக்கு நம்மளைத் தேடித் தானே வந்தாகணும் அப்ப...... பேசிக்கிருவோம்டா.... (மின்சாரப்பூ, ப. 70)** கறுப்பு மனிதர்களின் கட்டவிழாத மன தைரியமே எஞ்சி நிற்கிறது.

பத்துக் கதைகளில், பத்தாவது கதை மின்சாரப் பூ. சற்றே பெரிய சிறுகதை. செந்தட்டியின் தந்தை வயல்வெளியில் நீரோட்டம் பாய்ச்சிக்கொண்டிருந்த பொழுது, கிணற்று மோட்டாரில் மின்சாரம் தாக்கி இறந்தார். அதன் பின் அவனுடைய பள்ளிப்படிப்பு நின்று விடுகிறது. அவன் வயல்வெளிகளில் ஆடு, மாடு மேய்ப்பதையே தொழிலாக செய்து வந்தான். அந்த ஊரில் இதே போல் மின்சாரம் தாக்கி இறந்தவர்கள் சிலர்.

ஊருக்கு வெளிச்சம் தரக்கூடிய மின்சாரம் இவர்களின் வாழ்வில் மட்டும் இருளை தந்திருக்கிறது. மின்சாரப் பூவை வேடிக்கை பார்க்கலாம். அதை யாரும் சூடிக்கொள்ள முடியாது .மேல் சாதிஇ கீழ் சாதி என்ற நிலைப்பாட்டை ஆழமாய் பதிவு செய்து மக்களை சிந்திக்கச் செய்துள்ளார்.

**காதலும் நியாயமும்**

கிராமத்துக்காதல். காதல் திருமணம் செய்து கொண்ட ராக்கன், சின்னப்பாண்டி மகனின் காதலை முறிக்கிறார் ராக்கன். இவர் காதல் திருமணம் செய்தவர் என்பது இங்குக் கவனிக்கத்தக்கது.

**“சின்னஞ்சிறுசுக.... தூரதேசத்துலே ஆதரவுக்கு சொந்த பந்தமில்லாம என்னடா செய்வீக? உங்களுக்குச் சண்டை சத்தம் வந்தா... யார் தீர்த்து வைப்பாக? ஆயிரம் ரெண்டாயிரம் தேவைப்பட்டா யார் குடுத்து ஒதுவுவாக... யாராச்சும் உங்கள அடிக்க வந்தா யார் உங்கள காப்பாத்துவாக? எதுக்குடா? இந்தப் பொல்லாப்பு.. பேசாம... பெத்தவுக சொல்ற புத்திமதியைக்**

 ISBN Number: 978-81-992374-8-3

**கேட்டு....மாமா மகளைக் கல்யாணம் பண்ண சரின்னு சொல்றா" (ப. 92)** என்று பஞ்சாயத்து செய்வதைப் போல பேசி வைத்தார். சின்னப்பாண்டி மகன் ஒருவழியாக சம்மதித்து மாமா மகளைத் திருமணம் முடிக்கும் நாள் வந்தது. அன்று சின்னப்பாண்டி மகன் திருமணம் வேண்டாம் என்று ஓடிப்போய்விடுகிறான். இந்நிகழ்ச்சி அறிந்து ராக்கன் வருத்தப்படுகிறார். தானும் சேர்ந்து தவறு செய்துவிட்டோமோ என்று வருந்துகிறார்.

**ஒறவு மொறையை ஒதுக்கி வைச்சுட்டு... நீரும் கண்ணாத்தாவும் ஒண்ணாச் சேர்ந்து, ஒழைப்பாலே அன்பாலே ஒகோன்னு ஆகியிருக்க முடியுதே... நீரே...என்னை மட்டும் ஒறவு மொறை காலடியிலே வுழுந்துகிடன்னு சொல்லலாமா? ஞாயமா? ஒமக்கே இது உத்தமமா? (ப. 92)** என்று சின்னப்பாண்டி மகன் கேட்பது போல அவருக்கு பிரமை ஏற்படுகிறது. இதுபோன்று பல கேள்விகள் அவரைத் துன்புறுத்துகின்றன. உனக்கு ஒரு நியாயம் ஊருக்கு ஒரு நியாயமா என்று எண்ணி ராக்கன் அலைப்புறுகிறார். இன்னும் சில நாள்களில் ஒரு இளமை இணை இவர் வண்டி ஓட்டி வரும் பக்கம் ஆதரவு தேடி வருகின்றன. அவர்களை விரட்டிக் கொண்டு கும்பல் ஒன்று வருகிறது. இந்நேரத்தில் தன் வண்டிககுள் அவர்களை மறைத்துவைத்து ராஜபாளையத்தில் கொண்டு வந்துப் பத்திரமாகச் சேர்ந்து அவர்களுக்கு அறிவுரை சொல்கிறார்.

**கிராமத்து நம்பிக்கை**

மேலாண்மை பொன்னுச்சாமி அவர்கள் அடிப்படையில் கம்யூனிச சிந்தாந்த நோக்குடையவரரய் இருப்பினும், மக்களின் வழிபாட்டில், நம்பிக்கையில் விருப்பம் உடையவராக விளங்கியுள்ளார். அரசாங்கம் மக்களின் மத நம்பிக்கைகளில் தலையிடுவது

 **ISBN Number: 978-81-992374-8-3**

தேவைதானா என்ற கேள்வி இக்கதை வாசிப்பவர் உள்ளத்தில் பளிச்சிட்டெழுகிறது. மாரியம்மாள் மகளுக்கு ஜன்னிக் கோளாறு. நேர்த்திக் கடனையே மழுமையாய் நம்பி, வாழும் சமுதாயம். குலதெய்வத்திற்கு நேத்திக்கடன் போட்டு முதலில் வளர்த்த ஆடு சரியாக வெட்டுப்படாமல், கழுத்து துண்டாகப் போகாமல் தொங்கிவிட்டது. இது தெய்வக்குற்றம் என்று ஊரார் வழக்கமாய் சொல்லி வருவதுண்டு. தன் பிள்ளளையின் ஆயுசு வேண்டி போட்ட நேர்த்திக்கடனில் தவறு நிகழ்ந்தால்,பிள்ளை உயிருக்கு ஆபத்து இன்னும் எள்ளது என்ற எண்ணத்தில் அவள் அழுத அழுகை மற்றொரு பூசாரி சொன்னதன் அடிப்படையில், மீண்டும் அடுத்த ஆண்டு ஒரு கிடாய் வெட்ட, ஆவன செய்யப்பட்டது. ஆனால் அப்போது உயிர்ப்பலி கூடாது என்று அரசு ஆணையிட்டுவிடுகிறது. இதன் காரணமாக மாரியம்மாவின் வேண்டுதல் நிறைவேறாமல் ஆகிவிடுகிறது.

**“நம்ம கோவில்ல நம்ம கிடாயை நாம வெட்டுறதுலே கவர்மெண்டு என்னத்துக்கு குறுக்க வரணும்? பரம்பரையா வெட்டி வர்றொம்லே? யாரையும் கெடுக்கலே. யாருக்கும் கெடுதல் செய்யலே. கறி சாப்புடாத ஆளுகளைக் கூட கௌரவம் பண்ணித்தானேடா… வந்துருக்கோம்?” (ப. 80)**

**“கசாப்புக் கடைக, பிராய்லர் கடைக எல்லாம் ஒயின் ஷாப்புக மாதிரி எல்லா எடத்திலேயும் இருக்குல்லே? அதெல்லாம் உயிர்ப்பலி இல்லையா? (ப. 81)** என்ற நிலையில் மாரியம்மாவின் புலம்பல் அமைகிறது.

கறுப்பு மக்களின் வழிபாட்டுப் பண்பாடே கையறு நிலையில் புலம்பவதைப் போலிருந்தது மாரியம்மாவின் அழுகை என்று இக்கதை முடிகிறது. இக்கதையின்

 **ISBN Number: 978-81-992374-8-3**

வழியாக தொங்கு கிடாய் என்ற கிராமத்து நம்பிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. மக்கள் கடவுள் பெயரால் பசி போக்கும் பணியைச் செய்து வருவது சமுதாய விழுமியமாகக் கருதத்தக்கது.

**மனித நேயமும் பணமயமும்**

இன்றைய சமுதாயத்தில் மனித நேயம் மறக்கடிக்கப்பட்டு வருகிறது. பணநேயம் அதிகரித்து வருகிறது. இதனை வெளிப்படுத்தும் ஒரு கதையாக சிதைவுலகம் என்ற கதை அமைகிறது. கருப்பையா என்ற கதா பாத்திரம் இக்கதையில் ரூபாய் இரண்டாயிரத்திற்கு வழியில்லாமல் யாரிடம் கடன் கேட்பது என்று அலைகிறது. மதினி ஊருக்குச் சென்று அவளிடம் பணம் பெற்றுக் கருப்பையா திரும்புகிறார். அவர் திரும்பும் வழியில் செந்தட்டி என்ற உறவினப் பையன் ஒருவன், உழைக்காமல் ஏய்த்துப் பிழைக்கும் தன்மை உடைய அவன், இவரைத் தடுத்து நிறுத்தி காசு கேட்கிறான். அவனுக்கு பதினைந்து ரூபாய் எடுத்துத் தந்து இரண்டாயிரத்தில் கழிவாக்கிக் கொள்கிறார். இதன்பின் அவர் தார்ச்சாலையில் மிதிவண்டியில் தன் ஊருக்குத் திரும்பும் நிலையில் ஒரு இளைஞன் குடிபோதையில் மயங்கிக் கிடக்கிறான். அவனைத் தூக்கி மற்றொருவர் உதவியுடன் அவன் ஊரில் சேர்த்துவிடுகிறார். அவருக்கு மனதில் மகிழ்ச்சி. ஒரு நல்ல காரியம் செய்தோம் என்று.

**அடுத்தநாள் அந்த குடித்து மயங்கிக் கிடந்த இளைஞன் இவரிடம் வந்து 'நேத்து நீங்கதானே என்னை…? நல்ல காரியந்தான் பண்ணுனீக. என் சட்டைப்பையிலே, ஆயிரத்து எழுநூத்தி நாப்பது ரூவா வைச்சிருந்தேன். அதையும் குடுத்துட்டீகன்னா…. ரொம்ப நல்லதா போயிரும்" (ப. 1110)** என்று கேட்கிறான். இவர் மறுக்க ஒரே கூப்பாடாகிவிடுகிறது.

 ISBN Number: 978-81-992374-8-3

**“நல்லதுக்குக் காலமில்லையா? ஒதுங்கி வந்திருந்தால் வம்பு தும்பு இல்லாமற் போயிருக்குமா, இரக்கப்பட்டு நெருங்கியவனுக்கு எடுத்துச் சுமந்தவனுக்கு இந்தத் தண்டனையா? இதென்ன காலத்தின் கோலமே இதுதானா?” (ப. 111)** என்று தன்னை நொந்து கொள்கிறார் கருப்பையா. மனித நேயம் வியாபாரமாக ஆக்கப்படுகிற சூழலை இந்தக் கதை தெளிவாக எடுத்துரைக்கிறது.

**முடிவுரை**

சமுதாயத்தில் மனித நேயம் மாண்பாகப் போற்றப்பெற்று வளர்க்கப்பட வேண்டும். மனிதர்கள் தம் வேலைகளை மட்டும் கவனிக்கும் சூழலை இக்கதைகள் மறைமுக ஆதரிக்கின்றன. எனினும் பிறர் வேலைகளில் அல்லது பிறர் நலனில் தலையிடும்போது சிக்கல்கள் தோன்றுகின்றன. அச்சிக்கல்களை எதிர்கொண்டு வெற்றி பெறும் மனிதர்கள் வெற்றியாளர்கள் ஆகிறார்கள் என்பது இக்கதைகள் தரும் சமுதாய விழுமியம் ஆகும். தொழிலாளர்கள் தம் நேர்மை, உழைப்பவர்களின் வெற்றி, பெண்களின் மேன்மை, கரிசல் மண் சார்ந்த மக்களின் மனிதத்தன்மை போன்றன இவர் கதைகளில் புலப்படும் விழுமியங்கள். இவரின் கதைகளில் கரிசல் மண் சார்ந்த மனிதர்களின் தன்மைகள், கரிசல் மண் சாரந்த புழங்கு பொருள்கள், கரிசல் வட்டார வழக்குகள் போன்றன இயல்பாக அமைந்துள்ளன. இவரின் கதைகள் வழியாக சமத்துவமாக, தேமற்ற சமுதாயத்தை காணும் இவரின் விருப்பத்தை அறிந்து கொள்ளமுடிகின்றது.

**துணைநின்ற நூல்**

[1] மேலாண்மை பொன்னுச்சாமி. மின்சாரப்பூ. கங்கை பத்தகநிலையம், சென்னை.

 **ISBN Number: 978-81-992374-8-3**

# குறிப்புகள்

 **ISBN Number: 978-81-992374-8-3**

## குறிப்புகள்

 **ISBN Number: 978-81-992374-8-3**